வைத்திய சந்திரிகா

JL
L.5 m211 N25 VL
210 144

உ

நமது பத்திரிகை.

OFFICE OF THE ... 31 OCT 1930 MADRAS

சுகவாழ்க்கையை விரும்பும் ஒவ்வொருவரும் கவனிக்க
வேண்டிய விஷயங்களில் மிகப் பிரதானமானது சுதேச வைத்திய
முறையே. மேல் நாடுகளில் சிறுபான்மையோரால் தொழில்
முறையில் வைத்தியம் ஆதரிக்கப்படினும் நமது நாட்டில் ஹிந்து
மதத்தில் ஓர் பாகமாகவே அனாதி காலமாகக் கருதப்பட்டு வரு
கின்றது. இவ்வுலக வாழ்க்கையையே பெரிதென மதிக்கும்
நாஸ்திகர்களும், பரலோகமே பெரிதெனக் கொண்டாடும் பெரி
யோர்களும், தங்கள் கொள்கைகளுக்கு இன்றியமையாத சாதனங்
களில் மிகச்சிறந்ததென வைத்தியத்தையே நினைத்தனர். வைதி
கர்களில் மிக்காரிலையெனப் பெருமை பெற்ற பல சித்தர்களும்.
முனிவர்களும், நூல்களை லோகோபகாரமாக வெளியிட்டதும்,
அவற்றை யனுசரித்துப் பல பௌத்தர்களும் தங்கள் அனுபவத்
தில் கிடைத்துள்ள ரகசியங்களையும் சேர்த்து கிரந்த ரூபமாகத்
திரட்டினர். உலகினில் மற்ற பாகங்களுக்கு இவைகளே மூலகிரந்
தமாக விளங்கிற்றென்பதும், இவைகளையே ஆதாரமாகக்கொண்டு
மற்ற தேசத்தினரும் தங்கள் தங்கள் பாஷையில் கிரந்தங்களை இய
ற்றினரென்பதும் பலர் அறிந்த விஷயமே 'ஆரம்பத்தில் அயல்
நாட்டினருக்கு மூலகிரந்த பரிசயம் நன்றாகயிருந்து பிறகு பிந்திய
வர்களுக்கு அது போதாமல் தங்கள் தாய்பாஷையிலுள்ளவற்றை
யே கற்றும், அதில் சொல்லப்படாத விஷயங்களைத் தங்கள் சொந்த
அனுபவமுறையைக்கொண்டு கண்டுபிடித்தும் வருவது நாளைக்கும்
பிரசித்தமே. நமது நாட்டினில் பலர் நமது தாய்பாஷையில் பெரி
யோர்கள் வெளிவிட்ட பல ரகசியங்களையுணராது அவைகளைப்
புறக்கணித்துப் பெருமாய்கையில் மூழ்கி தூஷித்தும் வருகின்ற
னர். அவைகளை யுற்றுணர்ந்த பலர் பலனற்ற மாத்சரியத்தால்
சகோதர பாஷைகளிலுள்ளவற்றை வேறுபடுத்தி அவைகளின் ஏற்
றத்தாழ்வுகளையும் தங்கள் மனம்போல் ஆரோபித்து குற்றம் கூறு
ன்றனர். உண்மையில், தமிழ் முறையும், வடமொழி முறையும்
ஞானிமுறையும், கொள்கைகளில் வேறின்றி ஒன்றாய்க் கலந்திரு
பது மூன்று முணர்ந்த புலவர்களுக்குப் புலப்படும். தங்கள் தங்
ள் தாய் பாஷையில் ஈடுபட்ட அவரவர்கள் தங்கள் தங்கள்

210144.

பாஷையிலுள்ளவற்றைப் போற்றி ஆதரிப்பினும் இம் மூவகை முறையில் சகோதர உணர்ச்சி சற்றும் மாறுபட நியாயமில்லை. வடமொழியில் 'ப்ராஹ்மீ' என்றும் 'பிரம்மீ' என்று ஹிந்துஸ்தானியிலும், 'பிரமி' என்று தென்மொழியிலும் ஒரேபொருளைக்கூறுவதே இதற்கு அத்தாக்ஷியாகும். அல்பகாரணங்களால் ஒருவயிற்றிற் பிறந்த சகோதரர்களுள் கலகம் நேரிடுவதுபோல ஒருவருக்கொருவர் சண்டையிடும் நமது வைத்திய சகோதரர்களை ஒன்றுபடுத்துவது நமது பத்திரிகையின் முக்கிய நோக்கமாகும்.

நமது சுதேச வைத்திய முறைகளின் உண்மையறியாது பிதற்றும் சிலருக்கு அவைகளின் தத்துவத்தை யுணர்த்தி சமாதானமளிப்பதும் நமது பத்திரிகையின் செயலாகும். சரீரத்தின் உள் உறுப்புகளாகிய சுவாசப்பை, ஹிருதயம், கல்லீரல், மண்ணீரல் முதலிய வற்றின் இலக்ஷணங்களும் செயல்களும் சுதேச வைத்திய கிரந்தங்களில் சொல்லப்படவில்லை யென பலர் கருதுகின்றனர். வியாதிகளின் லக்ஷணங்களையறிய நிதானபாகம் போதாதென சிலர் சொல்லுகின்றனர். சுதேச வைத்திய கிரந்தங்களே சாஸ்திரீய முறையில் எழுதப்படவில்லையென பலர் நினைக்கின்றனர். பதார்த்த குணம் நன்றாகக் கூறப்படவில்லையெனச் சிலர் கூறுகின்றனர். ரசாயன ஆராய்ச்சி சரிவர செய்யப்படவில்லையென சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். கற்பனைசக்தியுள்ள ஹிந்துக்களால் முத்தோஷம் போன்ற சிற்சில விஷயங்கள் யூகத்தால் சொல்லப்பட்டவைகளெனவும், அவைகள் சாஸ்திரீய ஆராய்ச்சியில் கொஞ்சமும் நிலை நிற்கக் கூடாதவைகளெனவும் பலர் வாதிக்கின்றனர். இதுபோன்ற பல குறைகள் நமது வைத்தியத்தில் சொல்லப்படுகின்றன. இவைகளுக்குத் தக்க உத்தரமளிப்பதும் நமது பத்திரிகையின் நோக்கம். பல வைத்திய பத்திரிகைகள் பல பாஷைகளில் வெளிவந்துகொண்டிருப்பினும் அவை தேவைக்குப் போதாதென பல நண்பர்கள் வற்புறுத்தியதின்பேரில் நாம் இப்பத்திரிகையை ஆரம்பிக்கலாயினோம். அதிலும், நமது தென்னாட்டில் இதுபோன்ற ஒரு பத்திரிகை நடைபெறுவது அவசியமென நினைத்தே இக்காரியத்தில் துணிந்தனம். நமது வைத்திய சகோதரர்களும், அபிமானிகளும் இக்காரியத்தில் நமக்குப் போதியவளவு உற்சாக மூட்டுவரென்று நம்புகின்றோம். எல்லாம் வல்ல இறைவன் இவ்வரிய காரியத்தில் நமக்குத் துணை புரிவாராக.

பத்திராதிபர்.

உ

ஸ்ரீராமஜயம்.

சுதேச வைத்திய முறை.

சுதேச வைத்திய முறை தொன்று தொட்டு பலநூற்றாண்டுகளாக இப்பாரதபூமியில் பரவிவருவதும், இம்முறையைப் பின்பற்றி மேல்நாட்டாரும் மிக்க அபிவிருத்தியடைந்தார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மைகளே. ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத சாதனங்களில் முக்கியமானது வைத்தியப்பயிற்சி. ஆனது பற்றி மானிடவர்க்கம் உண்டானவுடனே அல்லது சற்று தாமதமாகவோ இப்பயிற்சியும் உலகினில் இருந்ததாகவே ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியம். ஒருகாலத்தில் மேன்மையுடன் விளங்கிய நமது வைத்தியத்தை யனுசரித்து மற்ற வகுப்பினர்களும் முறைகளை ஏற்படுத்திக்கொண்டனர் என்பதைப் பின்பு விவரிப்போம். இப்படி முதன்மைபெற்று விளங்கிவரும் நமது சுதேச வைத்தியத்தில் பலர் நவீன நாகரீகத்தில் மூழ்கி மேன்மை கீழ்மைகூட கவனியாமல் மதிமயங்கி பற்பல குற்றங்கள் கூறுகின்றனர். அக்கூற்றுகள் நமது முறையறியாமல் வந்தவையென்றும், நியாயமானவை யல்லவென்றும் பிறகு விவரிப்போம். அதில் முக்கியமாக, 1918-ௗ அக்டோபர்-மீ 31-உ சென்னை அரசாங்கத்தாரால் சுதேசவைத்திய முறைகளை ஆராய்ச்சிசெய்ய நியமிக்கப்பட்ட டாக்டர் M. C. கோமன் அவர்கள் எழுதிய அறிக்கையில்கூறுவதின் சாரமாவது. "எனக்கிட்டிருக்கும் வேலையை தீர ஆராய்ச்சிசெய்ய பல மூலிகைகள், மருந்துகளுடைய செய்பாடு, உபயோகம், பிரயோசனம், முதலியவை தெரியவேண்டி சில பிரபலமான ஆயுர்வேத கிரந்தங்களுடைய பரிச்சயம் அவசியமாகின்றது. N. N. சேன் அவர்கள் செய்த சுசருதஸம்ஹிதையின் ஆங்கிலமொழி பெயர்ப்பும், சரகஸம்ஹிதையின் மலையாளமொழிப் பெயர்ப்பும், மற்றும் சில கிரந்தங்களும் என் ஆராய்ச்சிக்கு மிகுந்த உபயோகமாக விருந்தன. என் ஆராய்ச்சிக்கு அவசியமாக விருந்த பிரத்யக்ஷாநுபவத்தின் பொருட்டு உள்ளூர் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளை கூடியமட்டில் அடிக்கடி பார்வையிட்டு அவைகளில் நடைபெறும் கிரமங்களையும் நன்றாக கவனித்தேன் அக்காலங்களில் மருந்துகள் செய்யும்விதம், வியாதியை தெரிந்துகொள்ளும் விதம், சிகித்ஸை முறை இவைகளைப்பற்றி விபரம் தெரிந்துகொண்டேன். மேற்படி ஆஸ்பத்திரிகளில் உபயோகிக்கும் சாதனங்கள் எல்லாம் மிகப்புராதனமானவை. தற்கால சாஸ்திரீயமுறைப்படி

மிகவும் சீர்திருத்தப் படவேண்டியவைகளாயிருக்கின்றன. வியாதிகளுக்குத் தகுந்தபடி மருந்து உபயோகிக்க போதியவளவு சாஸ்திர ஞானமும், அனுபவமுமில்லாமையால், நான் காலக்கிரமமாக சேகரித்துவந்த மருந்துகள் பொருந்தத்தக்க வியாதிஸ்தர்களை ஜனரல்ஆஸ்பத்திரியில் பொருக்கியெடுக்கவேண்டியதாயிற்று. கையிருப்பு மருந்துகள் பொருந்தும்படி வியாதிகளைக் கண்டுபிடிப்பது மிகவும்கஷ்டமான காரியமென்பது ஒவ்வொருவருக்கும் தெரிந்ததே. ஆரம்பத்திலே இவ்வாராய்ச்சி விஷயத்தில் மிகவும் அதைர்யமடைந்தேன். இந்த ருசிகரமான விமர்சையை செய்துமுடிக்க தகுந்த உதவி வேண்டுமென்று மிக கவலையுள்ளவனாகயிருந்தேன். சுசுருத ஆங்கில மொழிபெயர்ப்பு, சரகம், வாக்படம், மாதவநிதானம், இவற்றின் மலையாள மொழிபெயர்ப்பு, தமிழ்வைத்திய கிரந்தங்கள், மற்றும் சுதேச வைத்திய விஷயமான ஆங்கில புஸ்தகங்கள் கிடைத்தவுடன் என் கவலை மிகவும் குறைந்துவிட்டது. இந்துக்கள் மருந்தில் உபயோகிக்கும் சரக்குகள் எண்ணிறந்தவை. பிரதி தினமும் பல பதார்த்தங்கள் மருந்தாக உபயோகிக்கப்படுகின்றன. அவை அல்ப குணங்களாகவும் உண்மையில் குணமேயில்லாதவைகளாகவுமிருக்கின்றன. நான் பார்த்தமட்டில் சுதேச வைத்தியம் சாஸ்திர முறையை ஒட்டி ஏற்பட்டதல்ல, ‘நட்டாமுட்டி’ என்று சாதாரண ஜனங்கள் சொல்லுவதுபோல ஒரு அமிர்த்தமில்லாத அனுபவமென்கிற அந்தகாரத்தில் இன்றும் மூழ்கி கிடக்கின்றது. சென்னையிலும் நான் சென்ற வெளியூர்களிலும் மருந்துசரக்குகளில் அறிவிலிகளான பல சுதேச வைத்தியர்களைப் பார்த்திருக்கிறேன். சுதேச வைத்திய நூல்கள் மனிதர்களுக்கு பேய் பிசாசுகளால் தொந்திரவு உண்டாகுமென்புதை மிகவும் நம்புகின்றன. அவைகளை விலக்க விசித்திரமாயும், ஆபாசமாயுள்ள பலவழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வாராய்ச்சிக்கு குழப்பங்களும், கஷ்டங்களும் பல நேர்ந்தன. மூலிகைகளின் குணங்களை ஆராயுங்கால் எனக்கு முதலில் நேர்ந்த கலக்கமானது வாதம், பித்தம், சிலேஷ்மம் என்ற முத்தோஷங்களே. இவைகள் ஊஹத்தால் ஏற்படுத்தப்பட்டவை. இவைகளே சுதேசவைத்தியத்தில் வியாதிகளின் காரணம், அடையாளம், நிச்சயம், முற்குறி, சிகிச்சை இவைகளுக்கு ஆதாரமாகயிருக்கின்றன. சகலவியாதிகளும் ஒன்று, இரண்டு, அல்லது மூன்று தோஷங்களுடைய பிரகோபத்தாலேயே உண்டாகின்றன வென்று சுதேச வைத்தியர்கள் நினைக்கின்றனர். சிறந்த கவிராஜகளும், ஹக்கீப்களும், வைத்தியர்களும், இவற்றைப்பற்றி வெவ்வேறாக அர்த்தம் கூறுகின்றனர். உண்மையில் இவ்விஷயத்தை நன்கு அறிய விரும்பி எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டேனோ அவ்வளவுக்கவ்வளவு அது கஷ்டமாகவே யிருந்தது என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். கவிராஜகளும், பண்டிதர்களும், இத்தோஷங்களை நவீன சாரீரதத்துவம், நிதானதத்துவம், இவைகளுடைய அபிப்பிராயத்துடன் இணக்க தங்களாலானவளவு முயலுகின்றனர். ஆனால் அது முடியுமென்றும், அல்லது முடியக்கூடுமென்றும் நான் நம்பவில்லை. ஹார்வே என்பவர் சரீரத்தில் ரக்தஓட்டத்தை கண்டுபிடித்ததற்கு வெகு நாள் முந்தி பழையகாலத்து மகரிஷிகள் முத்தோஷங்களின் வேறுபாடுதான் வியாதிகளுக்கு காரணமென நினைத்திருக்கக்கூடுமென்று எண்ணுகின்றேன். ஆனால் நுட்பமான தற்காலத்திய உடற்கூறு சாஸ்திரத்திற்கு அது சற்றும் பொருந்தாது.

வடமொழி வைத்தியர்கள் மூலிகைகள், மருந்துகள் இவைகளின் குணங்களையும், உபயோகங்களையும் வர்ணிக்கும்பொழுது ஜீவாதாரமான முத்தோஷங்களில் அவைகள் செலுத்தும் விசேஷ சக்தியை நன்கு விவரிப்பதுடன், மிகைப்படுத்தியும் கூறியிருக்கின்றனர். உதாரணமாக :— ஓர்குறிப்பிட்ட வியாதிக்கு சொல்லும் மருந்தை அவ்வியாதி மாத்திரமின்றி இன்னும் பலவியாதிகளையும் போக்க வல்லதாகவும் நினைக்கின்றனர். கடுக்காயைப்பற்றி கவனிப்போம் அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லுவதாவது :— துவர்ப்பு, அல்ப திதிப்பு, புளிப்பு, கசப்பு, உஷ்ணசக்தி இவைகளுள்ளது. தீபன சக்தியுண்டு. குடலில் ஜீர்ணமாகாத சாமான்களை ஜீர்ணிக்கப்பண்ணும். வாலிபதசையை நீடிக்கச்செய்யும். அல்பவிரோசனம், ஆயுளை நீடிக்கச்செய்யும், ஞாபக சக்தியை பலப்படுத்தும், தாது புஷ்டியுண்டாக்கும். பெருவியாதி தோலில் நிறம் வேறுபாடு, குரல் கம்மல், நீடித்தகாய்ச்சல், விஷக்காய்ச்சல், மூளையைப்பற்றின வியாதிகள், கணவியாதிகள், பாண்டு, ஹிருதய ரோகங்கள், காமாலை, கிராணீ க்ஷயம், கட்டிகள், மகோதரம், கடுப்பு, மூர்ச்சை, நீர்ரோகங்கள், சுவாஸகாசம், அதிகமாக உமிழ் நீர் ஊறுதல், மூலம், பிலீகை, வயிற்றுப்பொருமல், புளியேப்பம், வயிற்றுவலி, இடுப்பு வலி, அரோசகம் மற்றும் கபம் வாதம் சம்பந்தமான வியாதிகள் இவைகளையும் போக்கும்.

அந்தந்த வியாதிகளுக்குத் தகுந்தபடி மருந்துகளை உபயோகிப்பதற்காக வியாதிகளின் லக்ஷணங்களையும் பிரிவுகளையும் அறியும் போதும் இதே குழப்பம் உண்டாயிற்று. உதாரணமாக மாதவ நிதானத்தில் காய்ச்சல் தனிவியாதிஎன்று சொல்லப்பட்டிருக்கின்றது சகல காய்ச்சல்களும் முத்தோஷங்களின் வேறுபாடுகளால் உண்டானவையென்பதுடன் பற்பல பேதங்களும் வர்ணிக்கப்பட்டிருக்கின்

றன. ஏககாலத்தில் முத்தோஷங்களும் வேறுபடில் சன்னிபாதமெனப்பெயர். தனித்தனி அடையாளங்களுடன் பதின்மூன்று சன்னிபாதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வியாதிகளின் காரணம், லக்ஷணம், பேதம் இவைகளைச் சொல்லுவதில் வடமொழி ஆசிரியர்கள் மிகுந்த சாமர்த்தியத்தைக்காட்டியிருக்கின்றனர். வியாதிகளின் நிதானம், பேதம் இவைகளைப்பற்றி அவர்கள் கொண்ட யூஹம் கொஞ்சமேனும் தற்காலத்துக்குப் பொருந்தாவென்றும் தற்கால சாஸ்திரீய விசாரணைக்கு முன் நிற்காதென்றும் சொல்லுவேன். மருந்து சரக்குகளில் எனக்கு அனுபவமில்லாததால் மற்றவர்களைக்கேட்டுத் தெரிந்த அடையாளத்தைக்கொண்டே சரக்குகளை வாங்கவேண்டியதாயிற்று. (1) மூளை சன்னி (2) பிளேக் (3) ஏகாங்க வாதம் (4) இளம்பிள்ளைவாதம் (5) க்ஷயத்தில் முதுகு உருதல் (6) மாம்சம் க்ஷீணித்தல் (7) இழுப்புவாதம் (8) பைத்தியம் (9) மூத்திரப்பைதாபனம் (10) யகிருத்தாபகம் (11) கல்லீரல் சுரம் இவைகளுக்கு விசேஷித்தமருந்து தங்களிடம் கிடையாதென்றும் தங்களால் இவ்வியாதிகளை குணப்படுத்த முடியாதென்றும் சுதேசவைத்தியர்கள் எல்லோரும் சொல்லிவிட்டனர். க்ஷயம், பெருவியாதி, நீரிழிவு இவைகளுக்கு அவர்கள் குறிப்பிட்ட மருந்துகள் தற்கால சாந்தியாக இருந்தாலும் அறவே வியாதிகளைப் போக்கடிக்குமென்று நம்பமுடியாது.”

டாக்டர் கோமன் அவர்கள்.

மலையாளத்தில் பிறந்தவர். மலையாளம் தாய்ப்பாஷையாகவும் ஆங்கிலத்தில் விசேஷ பயிற்சியும் அவருக்கு இருந்தது. தமிழ், சமஸ்கிருதம்போன்ற மற்ற பாஷைகளில் கொஞ்சமேனும் அவருக்கு பரிசயம் கிடையாது. பரிச்சயமும், அனுபவமும் இல்லாத ஒரு முறையில் குணதோஷம் அறிய ஆராயப்புகுவது மிகவும் விந்தையே. ஆங்கிலம் அறியாத ஒருவர் ஆங்கில முறையை பரிசீலனம் செய்வது போலவே இதுவும் விரும்பத்தக்கதல்ல. அவ்வாராய்ச்சியிலும் கற்றறிந்த பண்டிதர்களை உதவியாகக் கொள்ளாமல் தாமே நிர்வகிக்கப்புகுந்தது யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதில்லை. மொழி பெயர்ப்புக்களைக்கொண்டு செய்யும் ஆராய்ச்சியும் சரியாக பலனளிக்கதக்கதல்ல. தவிர, மேற்படி மொழிபெயர்ப்புகளை பெயருக்கு மாத்திரம் வைத்துக்கொண்டாரேயொழிய அவற்றில் இவர் செய்த ஆராய்ச்சி என்னவென்பது அவருடைய அறிக்கையில் சிறிதும் காணப்படவில்லை. இவர் ஆராய்ச்சிசெய்த மூலிகைகள் சுதேச வைத்தியர்களிடம் கேட்டுத்தெரிந்தவைகள். மருந்துகள் பெரும்பாலும் பம்பாய்முதலிய இடங்களிலுள்ள கம்பெனிகளின் மருந்துஜாப்தாக்களைக்கொண்டே செய்தவை. இவர் ஆதாரமாகவைத்துக்கொண்ட மொழிபெயர்ப்பு புஸ்தகங்களுக்கும் ஆராய்ச்சிசெய்த மருந்துகளுக்கும் கொஞ்சமும் சம்மந்தமில்லை. அறிக்கையில் மருந்துகள் வரவழைக்கப்பட்ட இடங்களின் குறிப்புகளைபார்த்தால் இவ்விஷயம் நன்றுபுலப்படும். உண்மையில் இவர் மொழிபெயர்ப்பு புஸ்தகங்களை ஆதரவாக வைத்துக்கொண்டதாகச் சொல்லுவதைவிட கம்பெனிகளின் விலை ஜாப்தாவை ஆதரவாகக்கொண்டனர் எனச்சொல்லுவது மிகைபடாது. ஆகையால் இவ்வாராய்ச்சி விலைஜாப்தா ஆராய்ச்சியேயன்றி சாஸ்திர ஆராய்ச்சியல்லவென்று உறுதி கூறலாம். பல வைத்தியர்களை சந்தித்து சிலதகவல் தெரிந்துகொண்டதாகச் சொல்லுகிறார். அந்தந்த இடங்களில் வைத்திய சபை கூட்டி அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரிடம் உண்மை தெரிந்துகொள்வது நியாயமேயன்றி நேர்ந்த வைத்தியர்களிடம் கேட்டசங்கதிகளை பரீக்ஷித்துப் பார்ப்பது முற்றிலும் தவறாகும். அமுக்கராவேர் ஜீர்ணசக்தியை அதிகப்படுத்துமென்று யாரோ ஒருவர் சொன்ன சங்கதியைத் தான் பரீக்ஷித்து பலனில்லாமற் போயிற்று என்று அவர் சொல்லுவதே நாம் கூறியதற்கு சாக்ஷியாகும். அமுக்கராவேருக்கு அத்தகைய குணம் இருப்பதாக சுதேச வைத்தியர்களில் பெரும்பாலோர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஒரு முறையை ஆசான் மூலமாக கற்காமல் புஸ்தகத்தை பார்த்துத் தானே தெரிந்து கொள்ளுவது விந்தையிலும் விந்தை. இவர் ஆதாரமாகக் கொண்ட புஸ்தகங்களை எழுத்து எழுத்தாக அச்சுக்கோர்த்து பதிப்பி[illegible]வருக்கும் பல வருஷங்களாக விலைக்கு விற்று வந்த வியாப[illegible]கும் அதன் உண்மைகள் விளங்கா என்பது தெரிந்த விஷய[illegible] ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளில் பிரதிதினம் கொஞ்சநேரம் நின்று பார்த்ததால் தனக்கு அனுபவமுறை தெரிந்துவிட்டதாக பெருமை கொள்ளுகிறார். இது முற்றிலும் அசம்பாவிதம். சுதேச வைத்தியத்தில் பல வருஷங்களாக தேர்ச்சிபெற்று ஞானிகளான பல பெரியோர்கள் அனுபவ முறையில் பரிச்சயம் போதாதென சொல்லும்போது ஸ்ரீமான் கோமன் அவர்களின் அனுபவம்போதுமென ஒருபோதும் நாம் திருப்தியடைய முடியாது. சிலகாலம் கவனிப்பதால் எப்படி ஒரு முறையில் போதுமான பரிச்சயம் உண்டாகுமென்பது விளங்கவில்லை. கவர்மெண்ட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை முறை நடக்கும் காலத்தில் பரிச்சயமில்லாத ஒருவன் கொஞ்சகாலம் நின்று கவனித்தால் அவன் ஆங்கில வைத்திய முறையில் தேர்ச்சிபெறக் கூடுமென்று ஸ்ரீமான் டாக்டர் அவர்கள் உண்மையில் நம்புவாரா?

மொழி பெயர்ப்புகளையும், இவ்வனுபவத்தையும் இவர் நம்பி ரோகிகளுக்கு மருந்துகொடுக்கத் துணிந்தது பெரும் சாகஸமென்றே நினைக்கின்றோம். சுதேச வைத்திய ஆஸ்பத்திரிகளில் உபயோகிக்கும் சாதனங்கள் புராதனமானவையென்றும் அவைகளை தற்காலத்திற்கேற்றவாறு சீர்திருத்தவேண்டுமென்றும் பொதுவில் சொல்லுவது விளங்கவில்லை. சீர்திருத்தப்படவேண்டிய பாகம் சற்றேனும் இருப்பதாக நமக்குப் புலப்படவில்லை. ஜாஸ்தி அறிவும் வழக்கமும் தனக்கு கிடையாதென்பதை மனமார ஒப்புக்கொள்ளுகிறார். இந்நிலைமையில் இவர் தனக்கிட்ட வேலையை மறுத்திருத்தல் உசிதமென்று நாம் கூறுவோம். கையிலிருக்கும் மருந்துக்கேற்றவாறு ஜனரல் ஆஸ்பத்திரியில் ரோகிகளை பொறுக்கி எடுத்தாராம். இதைப் படிக்கும் யாவரும் நகைப்பார்கள் என்பது திண்ணம். ஒரு விஷயம் இங்கு நாம் குறிப்பிடுவது பொருந்துமென நினைக்கின்றோம். அதாவது ஒரு வியாதிக்கு மருந்தை ஒருவர் கண்டுபிடித்தால் உலகினில் அவ்வியாதியுள்ள எல்லாருக்கும் கூசாது அம்மருந்து ஒன்றையே உபயோகிப்பது ஆங்கில முறை. சுதேச வைத்தியமுறையோவெனில் அவ்விதமில்லாது நோயாளியின் சரீரக்கூறு, நோயின்கூறு இவைகளை கவனித்து அதற்கேற்றவாறு மருந்துகளை உபயோகிப்பது நம் நாட்டுமுறை. இவ்விதம் இம்முறைகள் மூலக்கொள்கைகளில் மிகுந்த பேதமடைந்திருப்பதால் ஆங்கிலம் மாத்திரமறிந்த நமது டாக்டர் கையில் மருந்து கிடைத்தவுடன் நோயாளியைத்தேட ஆரம்பித்தார். அந்தோ பாவம்! அந்நோயாளியின் கதி என்னவாயிற்றோ. சுதேச வைத்திய முறைகளை பல வருஷம் கற்று அனுபவம் முதிர்ந்தவர்களையுங்கூட "Quacks" என்று இதரர்கள் கூவும்போது ஒன்றுமறியாமல் மருந்துகளை விலை ஜாப்தாவைப் பார்த்து உபயோகித்த நமது நண்பரை என்னென்று சொல்வது. ஏராளமாக புஸ்தகங்கள் கிடைத்தவுடன் கவலை எவ்விதம் நீங்குமோ நாம் அறிகிலோம். சுதேச வைத்திய முறையில் ஒவ்வொரு மருந்திலும் பல சரக்குகள் சேருவதாகக் குறை கூறுகின்றார். ஒவ்வொரு வியாதிக்கும் கூட்டு மருந்தும் தனி மருந்தும் சுதேச வைத்திய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. கூட்டுமருந்தாவது:— ஒரு வியாதியைப் போக்கடிக்கக்கூடிய பல சரக்குகளை ஒன்றாகக்கூட்டி உபயோகித்தல். ஒருசரக்கே வியாதிக்குப் போதுமானதாயினும் அதே சக்திவாய்ந்த மற்றும் பலசரக்குகளின் சேர்க்கையால் அச்சரக்கு இன்னும் விசேஷ சக்தியடைந்து வியாதியை துரிதமாக கண்டிக்கின்றது. ஆங்கில வாகடநூல் 1618-வருஷத்தில் முதல் முதலாக வெளியானபோது ஒவ்வொரு மருந்திலும் 30-முதல் 50-வரையில் சரக்குகள்சேர்

திருந்தன. 131 சரக்குகள் சேர்ந்த ஒரு மருந்தும் அதில் இருந்தது. பிறகு 1788-ம் வருஷத்தில் ஒவ்வொருமருந்திலும் சரக்குகளை குறைக்கவேண்டுமென்ற எண்ணம் உதித்தது. பிறகே காலக்கிரமமாக குறைக்கப்பட்டது. சுதேச வைத்தியத்தில் தனிச்சரக்குகளாலும் சிகிச்சைமுறை சொல்லப்பட்டிருப்பதுபோல ஆங்கில முறையிலும் காணப்படுவதல்லாமல் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டது ஒன்றுமில்லையென்று உறுதி கூறுவோம். சுதேச வைத்தியம் சாஸ்திரமுறையை ஒட்டியதல்லவென்கின்றார் சாஸ்திரீய முறையென்றால் யென்ன? தாங்களும் தங்கள் வகுப்பாரும் கட்டுப்பாடாகக் கொண்டிருக்கும் முறையென்றால் நாம் அவ்விஷயத்தில் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அல்லது தாங்கள் ஒப்புக்கொண்ட முறைக்கு ஒவ்வாதவைகளென்று பொருள்கூறில் சுதேச வைத்தியமுறைக்கு ஒவ்வாத ஆங்கில முறையும் அத்தோஷத்திற்குள்ளாகும். சரீரதத்துவமும், நோயின் குணமும், நோய்களால் சரீர அமைப்பில் உண்டாகும் வேறுபாடுகளும், ஔஷதங்களின் குணமும், ஔஷதங்கள் சரீரத்தில் வியாபிக்கும் பேதமும், அவற்றால் சரீர அமைப்பில் உண்டாகும் மாறுபாடும், விவரமாக அறிவதே சாஸ்திரீய முறையென்று கொள்ளில் இது சுதேசவைத்தியத்திற்கும் மிகவும் பொருந்தும். நமதுடாக்டர் அவர்கள் பல வைத்தியர்களை சந்தித்திருக்கக்கூடும். அவர் சந்தித்த வைத்தியர்களெல்லோரும் சாஸ்திரமுறை யறிந்தவர்களென்று அவரே உறுதி கூறமுடியாது. நவீநமுறையில் கேட்கும் கேள்விகளுக்கு சிலர் சமாதானம் சொல்ல முடியாமல் திகைத்தார்களென்ற ஒரு காரணம் கொண்டே ஒரு முறையை முழுவதும் தூஷிப்பது அறிஞர் செயலன்று. பல டாக்டர்கள் தாறுமாறாக ஔஷதம் கொடுத்து பிறகு தவிப்பதை நாம் கண்ணார காண்கின்றோம். வெள்ளை குஷ்டத்திற்கு ஒரு ஆங்கில வைத்தியர் மேலுக்கு மருந்து உபயோகித்துப் புண்ணாக்கி அந்தப் புண் குணமாக மாதக்கணக்கில் கஷ்டப்பட்டார். வியாதி கொஞ்சமும் நீங்கவில்லை. இந்தச் செய்கையை என்னென்று சொல்வது! வெள்ளைக்குஷ்டத்தைப் புண்செய்தால் நிவர்த்தியாகுமென்று ஆங்கில சாஸ்திரமுறை கூறுகின்றதா? அவர் நடத்தியது சாஸ்திரீய சிகிச்சையா? இவ்விதம் யாதாமொருவர் செய்யும் காரியத்தைக்கொண்டு ஒரு முறையை தூஷிப்பது நியாயமாகுமா? பேய் பிசாசுகள் சொல்லப்பட்டிருப்பதாக டாக்டர் கூறுகின்றார். வடமொழியில் இவர் கைக்கொண்ட கிரந்தங்களில் சரகத்தில் இதைப்பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. மற்றைய கிரந்தங்களில் இவர் கூறுவதுபோல ஆபாசமாகவாவது, விசித்திரமாகவாவது ஒன்றும் கூறப்படவில்லை. தென் மொழியிலும், அகத்

தியர் வைத்திய காவியம், தேரையர், ஞானவெட்டி போன்ற கிரந்தங்களில் ஒன்றும் காணப்படவில்லை. சில கிரந்தங்களில் இருப்பினும் அதனால் யாது பாதகமென விளங்கவில்லை. ஷேக்ஸ்பீயர் என்ற மேதாவி எழுதிய ஆங்கில நாடகங்களில் பேய் பிசாசுகள் சொல்லப்பட்டிருக்கின்றன வென்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதனாலேயே அதைப் பரிகரித்தவர் யாருமிலர். அக் கிரந்தங்களில் மருந்து முறைகளின் குணதோஷங்களை ஆராய்ந்து கூறுவதுதான் நியாயமாகும். வாதம், பித்தம், சிலேஷ்மம் இவைகளைக் கேட்கும் போது மிகக் கலக்கமுண்டானதாக டாக்டர் கூறுகிறார். சுதேச வைத்தியமே முத்தோஷங்களை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சரீர அமைப்பும், வியாதிகளின் காரணமும், ஔஷதங்களின் உபயோகமும், முத்தோஷங்களைக்கொண்டு தான் அறியப்படவேண்டும். ஆகவே சுதேச வைத்திய முறைப்படி எந்த விஷயமும் முத்தோஷங்களின் அறிவையே பிரதானமாகக்கொண்டிருக்கின்றது. சுருதி, ஸ்வரம், தாளம் என்கிற முவ்வகை ஞானமின்றி சங்கீதம் கேட்கச்சென்ற ஒருவர் தான் தாறுமாறான சப்தத்தைக் கேட்டதாகச் சொல்லுவதுடன் ஆனால் சப்தம் காதுக்கு மாத்திரம் இனிமையாக இருந்ததெனச் சொல்லுவதுபோல, நமது டாக்டர் அவர்கள் முத்தோஷங்கள் தனக்கு விளங்கவில்லையென்றும், ஆனால் சில மருந்துகள் மாத்திரம் குணமுள்ளவைகளென்றும் சொல்லுகிறார். சங்கீதம் கேட்டவருக்கு முவ்வகை ஞானங்களுமிருந்தால் எவ்வித பரமானந்த முண்டாகுமோ அவ்விதமே நமது டாக்டரும் முத்தோஷங்களை முதலில் நன்கு அறிந்து பிறகு மருந்துகளை ஆராயப்புகுந்திருப்பின் சுதேச வைத்திய முறைகளில் மிகவும் மகிழ்ச்சியெய்தியிருப்பர் என்பது திண்ணம். இம் முத்தோஷங்களைப்பற்றி விரிவாக எழுதவேண்டியிருப்பதால் முத்தோஷம் என்ற தலையங்கத்தில் பார்க்கவேணுமாக நமது நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். இம் முத்தோஷங்கள் ஆங்கில முறைக்கு விரோதமில்லாதவைகளென்றும், ஆங்கில விற்பன்னர்களால் கண்டுபிடிக்கப் படாதவைகளென்றும், இவைகளை யறியாமல் வியாதிகளுக்குத் தக்கபடி சிகிச்சைசெய்ய முடியாதென்றும், ஆங்கில முறை சிலவிடங்களில் தவறுவதற்கும் காரணம் இதுதானென்றும் இவைகளை விஸ்தாரமாக மேற்சொன்ன தலையங்கத்தின்கீழ் கூறுவோம். ஆங்கில முறையில் ரத்த ஓட்டம் கண்டுபிடிக்கப்பட்டதாக டாக்டர் பெருமை கொள்ளுகிறார் 1628-ம் வருஷம் ஹார்வே என்ற மேல்நாட்டு வைத்தியர் குழாய்களில் ரத்தம் ஓடுவதாகக் கண்டுபிடித்தார். அதுவரையில் ரத்தக் குழாய்களில் வாய்வு ஓடுவதாகவே மேல்நாட்டாருடைய எண்ண

மிருந்தது. ஹார்வே ஷை குழாய்களில் ரக்தம் ஓடுவதாகச் சொன்னவுடன் அக்காலத்தில் ஜனங்கள் அவருடைய அபிப்பிராயத்தைக் கேலிசெய்து பத்து வருஷம் வரையில் அவருடைய வைத்திய உதவியை விரும்பாமலிருந்தார்கள். 1628-ம் வருஷத்திற்குப்பிறகுதான் ரக்தக்குழாய்களில் ரக்தம் ஓடுகின்றதென்ற மதம் ஊர்ஜிதத்திற்கு வந்தது. மதிப்பிடக்கூடாத வருஷங்களுககு முந்தி சரகம் போன்ற கிரந்தங்கள் எழுதிய மகரிஷிகள் ரத்த ஓட்டத்தை விரிவாக எழுதியிருப்பதை நமது டாக்டர் அறியார்போலும். சரீரத்தில் ரத்த ஓட்டத்தை நன்குணர்ந்த நம் பெரியோர்கள் முத்தோஷங்களை விவரித்திருப்பதால் நமது டாக்டர் கூறும் வாதம் சற்றும் பொருந்தாது. சுதேச வைத்திய கிரந்தங்களில் ரத்த ஓட்த்தைப்பற்றி விரிவாகச்சொல்லும் வசனங்களைக்கூட படித்தறியாமல் நமது சாஸ்திரங்களை ஆராய்ந்துவிட்டதாகக் கூறுவது நகைப்புக்கே இடமாகும். சரீர அமைப்பில் முத்தோஷங்கள் உளவென்றும், நாம் உட்கொள்ளும் ஆகாரம் முதலியவைகளால் அம்முத்தோஷங்களில் வேறுபாடு உண்டாகின்றதென்றும், அவ்வேறுபாடுகளுக்கே வியாதிகளெனப் பெயரென்றும், அவ்வியாதிகளுக்கு உபயோகிக்கும் ஔஷதங்கள் அவ்வேறுபட்ட முத்தோஷங்களை தன் நிலையில் நிறுத்தி வியாதிகளைத் தணிக்கின்றனவென்றும் சுதேச வைத்திய நூல் கூறுகின்றது. வடமொழியில் ஒரு மூலிகைக்கு பல குணங்கள் கூறப்பட்டிருப்பது எவ்விதம் குற்றமாகுமென்பது விளங்கவில்லை. சில மூலிகைகளுக்குக் குறிப்பிட்ட வியாதியை விலக்கும் குணமும் சிலவற்றிற்கு அதிகவியாதிகளைப் போக்கும் குணங்களும் அந்தந்த வஸ்துக்களுக்கு ஏற்றவாறு இருப்பதால் அந்தந்த சந்தர்ப்பங்களில் அவைகள் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்திலும் குணபாடத்தில் ஒரு சரக்கு பல வியாதிகளைப்போக்குவதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக 'குவினைன் சல்பேட்' என்னும் மருந்தை எடுத்துக்கொள்வோம். அதன் குணங்கள் :—

முறைக்காய்ச்சல். பித்தசுரம், தாபசுரம், சந்ததசுரம், சன்னிபாத சுரம் அதிசாரசுரம், குருமாந்தரோகம், பாலசுவாசபந்தம், நுரையீரல், தாபநரோகம், சுவாசநோய், நுரையீரல் தாபநரோகத்தில் காணும் பலஹீனம், நுரையீரலில் காணும் ஒரு சாதி அழிப்புண், கண்வலி, கக்கிருமல், இருமல், நேத்திரமண்டல தாபநரோகம், அக்கி, எரிச்சலோடுகூடிய கரப்பான், ஒருசாதி அழிப்புண், கன்னம் உதடு இவைகளின் உட்புறத்தில் காணும் புண், விரண சன்னி, க்ஷயம் இவைகளுக்குக் கொடுக்கலாம்.

இவ்விதமே கேலமேல் போன்ற பல மருந்துகளுக்கு அவர்கள் சொல்லும் குணபாடம் அபரிமிதம். சுதேச வைத்திய முறையில் கடுக்காய் கலக்காத மருந்து ஒன்று கிடைப்பது அபூர்வம். ஒவ்வொரு மருந்துக்கும், மூலிகைக்கும் சில பிரதான குணங்களும் சில சாதாரண குணங்களும் அப்படியே வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. ஆசான்மூலமாகப் படித்து அனுபவம்பெற்ற அறிஞர்களுக்கு அவை நன்றாக விளங்கக்கூடியவைகளே. ஒவ்வொரு வியாதியின் காரணத்தையும், உட்பிரிவையும், நன்கு அறிந்தே மருந்தை உபயோகிக்கவேணுமென்பது சுதேச வைத்தியத்தின் கொள்கை அவையறியாத சிலருக்கு அனுகூலமாக சில ஔஷதங்களும் சொல்லப்பட்டிருக்கினறன. அதாவது உதாரணமாக காய்ச்சலை எடுத்துக்கொள்வோம். அதன்காரணங்களையும், நிலைமைகளையும், அதன் உட்பிரிவுகளையும் ஆராய்ந்து அதற்கேற்றபடி செய்யும் சிகிச்சை ஒரு வழி. அஃதின்றி காய்ச்சல் என்றுமாத்திரம் அறிந்து அதன் உட்பிரிவு முதலியவைகளை யறியாமல்செய்யும் சிகிச்சை மற்றொரு வழி. இந்த இரண்டு வழிகளும் ஆயுர்வேதத்தில் கூறப்பட்டுள்ளன. முற்கூறியபடி வியாதியின் உட்பிரிவு முதலியவைகளை யுணராது செய்யும் சிகிச்சை சீக்கிரத்தில் நல்ல பலனளியாமற்போவதை அனுபவத்தில் பன்முறை கவனித்திருக்கின்றோம். காய்ச்சலுக்கு மாத்திரம் சொன்ன ஔஷதங்களைக்கொண்டு சிகிச்சை செய்வதைக் காட்டிலும் அது வாதஜ்வரமா, பித்த ஜ்வரமா, என்று உட்பிரிவுகளைக் கவனித்தும், அது ஆமாவஸ்தையா, பச்யமாநாவஸ்தையா, அல்லது பக்வாவஸ்தையா என்று அதன் நிலைமை முதலியவைகளையும் நிதானித்து நடத்தும் முறை ஒருக்காலும் பலனில் தவராது என்று சுதேச வைத்திய நூல்கள் கூறுகின்றன. நவீன முறைக்கு அவை பொருந்தாவென்பதும் நியாயமல்ல. வியாதி மாத்திரம் தெரிந்து மருந்து கொடுப்பதென்கிற ஆங்கில முறையும் நமது புராதன முறையில் ஒருபகுதியென்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றோம். நமது சந்திரிகையில் சிகிச்சை என்ற தலையங்கத்தில் இரண்டு முறைகளுக்கு முள்ள வித்தியாசத்தை நன்கு எடுத்துக் காட்டுவோம். ஆங்கில முறையில் மருந்து செய்பாகம் நமது டாக்டருக்கும் அவருடைய சகாக்களுக்கும் தெரியவேண்டிய அவசியமில்லாமற் போகின்றது. வெளிநாடுகளில் கம்பெனிகள் மேற்போட்டுச் செய்யும் மருந்துகளை சிலர்கள் வாங்கி யுபயோகிக்கின்றனர். வைத்தியத்தில் முக்கியமான செய்பாகம் என்னும் விஷயமில்லாமலே இவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். ஆனால் சுதேச வைத்தியமுறையில் அவ்விஷயம் நன்குணராது வைத்தியரெனப் பெயர்கொள்வது அசாத்தியமே. பற்பல கொடிய

வியாதிகளுக்குத் தகுந்த மருந்து சுதேச வைத்தியத்தில் கிடையாதென்ற முடிவுக்கு வந்திருக்கின்றார். இவ்வியாதிகளிலும் சராசரி நூற்றுக்கு இருபத்தைந்து சுதேச வைத்தியமுறைகளால் குணப்படுத்தப்படுகின்றன. டாக்டர் அவர்கள் தான் சந்தித்த சுதேச வைத்தியர்களிடம் மருந்து ஜாப்தாக்களை கிரகிக்க யத்தனம் செய்ததில் பலர் பலவிதமாக சாக்கு சொல்லி தப்பித்துக்கொண்டனர். சிலர் அது முடியாத காரியமென நேரில் மறுத்தனர். சிலர் உண்மையில் தங்களுக்குத் தெரிந்தவைகளைச் சொல்லிக்கொடுத்தனர். ஆகையால் இவரது ஆராய்ச்சி பூரண பலனளிக்காமற்போயிற்று. அப்படியின்றி குறிப்பிட்ட வியாதிகளுக்கேற்ற மருந்து வேண்டுமென்று பத்திரிகைகள் மூலமாகவோ மற்றெவ்விதமோ சுதேச வைத்தியர்களுக்கு அறிவித்திருப்பின் அவர்கள் அனுப்பும் மருந்துகளைப் பரீக்ஷித்துப்பார்த்து ஓர் நியாயமான முடிவுக்கு வந்திருக்கக்கூடும்.

வைத்தியமும் வைதீகமும்.

(ஸ்ரீ. பார்த்தஸகன் எழுதுவது.)

வைதீகம் என்ற பதம் ஆதியில் எதைக் குறிப்பிடவந்ததென்பதை ஆராய்வது அனாவசியம். தெய்வ திருப்திக்காகவும், தெய்வத்திற்கு பயந்தும் மனிதன் நடந்தால் அவனை மற்றொன்றிலிருந்து பிரித்துக்காட்ட ஏற்பட்ட பதமாயிருக்குமென்று பெரியோர் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இப்பொழுது வைதீகன் என்று யாரை குறிப்பிடுகிறோம்? நமது பழைய சமுதாய ஏற்பாடுகளிலோ அல்லது மத ஆசார அனுஷ்டானங்களிலோ, அன்றி நமது பண்டைப் பழக்க வழக்கங்களிலோ மாறுபடாமல் பழைய வழக்கங்களை அனுஷ்டித்து வரும் ஒருவனை வைதீகன் என்று கருதுவது பொதுவாக நம்மவருக்குள் சகஜமாயிருக்கிறது. வைதீகனென்றால் சாது, கபடில்லாதவன் என்ற பொருள்களிலும் கொள்ளப் படுவதைக் காணலாம். நவ நாகரீகத்தால் மாறுபட்ட மனத்தினர் இப்படி கூறி எள்ளுவது பொருத்தமானதே.

ஆகவே, வைதீகம் என்ற சொல்லானது நமது புராதன நாகரீக அனுஷ்டானங்கள், ஆகாரங்கள், அமைப்புகள் முதலியவற்றையெல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்கும் பொருள்செறிந்ததோர் பதமென ஆயிற்று. சரி; வைத்தியத்திற்கும், வைதீகத்துக்கும் என்ன சம்பந்தம்? வைத்திய புஸ்தகத்தில் வைதீகத்தின் பெருமையை விஸ்தரிப்பானேனென பலர் ஐயுறக்கூடும். வைத்தியமும், வைதீகமும் ஒன்றே; வேறு வேறு அன்று. வைதீக அனுஷ்டானங்களிலும், ஆசாரங்களிலும், வைத்திய வாசனை கமழ்கிறது. ஒவ்வோரு சிறிய ஏற்பாடுகளிலும் சரீரசௌகரியமே பிரதானமாகக் கருதப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. தேகம், மனம் முதலியவற்றிற்கு வேண்டியன அளித்து அவைகளை போஷித்து வளர்த்து வரவே நமது மத சம்பிரதாயங்கள் கற்பிக்கப்பட்டனவோ என்று கண்டவர் சந்தேகப்படும்படி அவ்வளவு நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. சமூக அமைப்பு, ஆசாரம் முதலியவைகளை ஆதியில் அருளிய காமக் குரோதமற்ற, உயர்வு தாழ்ச்சி என்ற உணர்ச்சிகள் லவலேசமுமில்லாத மஹரிஷிகள் தேகக்கூறு சாஸ்திரங்களிலும், மனோதத்துவ நூல்களிலும் அதி வல்லவர்கள் ஆனபடியால் தாம் செய்த இந்திய ஜாதியின் வளர்ச்சிக்குரிய ஒவ்வொரு சிறிய ஏற்பாடுகளிலும், தேகத்திற்கும் மனத்திற்கும் பூர்ண சௌகர்யம் தரத்தக்கனவும், அவைகளின் இயற்கை இயக்கத்திற்கு இம்மியும் இடையூறு விளைவிக்காது அவைகளின் சுபாவத்தையொட்டிய முறைகளையே வரையறுத்தும் இருக்கின்றனர்.

புராதனவழக்கங்களை அனுஷ்டித்துவரும் வைதீகர்களுடைய தேகக்கட்டு, மன உறுதி, கஷ்டத்தை பொருத்துக்கொள்ளும் சக்தி, தம் இஷ்டப்படி சரீரத்தை அடக்கி ஆளும் வல்லமை முதலியவற்றில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட நமது நவ நாகரீகத்தின் செல்வக் குழந்தைகளிடம் காண்பதரிதென்பதை அவர்கள் உள்ளிட்ட யாவரும் ஒப்புக்கொள்வர். புதிது புதிதாக, நிமிஷத்திற்கொரு விநோதப் பெயருடன் தோன்றி தன் திருவிளையாடல்களை எங்கும் செய்து வரும் பன்னூறுவித வியாதி வேற்றுமைகளை நமது வைதீகர்களிடம் பார்க்கமுடியாது. அவர்கள் அடிக்கடி தாங்கமுடியாத தலைவலியாலும், தீராத மூத்திர ரோகங்களாலும், மற்றும் காசம் முதலிய கொடிய நோய்களாலும், இடைவிடாது பீடிக்கப்பட்டு வருந்துவதில்லை. ஏன்? சற்று உற்று கவனித்தால் விளங்காமற்போகாது. பழைய அனுஷ்டானங்கள் எல்லாம் வைத்திய சாஸ்திர ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பட்டிருத்தல் எளிதில் தெரிந்துகொள்ளக் கிடக்குமோர் விஷயம்.

வைத்தியப்பயிற்சியும் அதன் உபயோகமும் எந்த நோக்கத்துடன் தோன்றின? மனிதனுடைய ஆரோக்கியத்தைக் குறைவின்றி காப்பாற்றி சரீரசுகத்தை எந்நேரமும் ஈவதற்காகவல்லவா? மனிதன் தான் செய்யப்புகும் ஒவ்வொரு அணுப்பிரமாணமான நுட்ப விஷயங்களையும் சரீர சௌகர்யத்தை உத்தேசித்து ஆராய்ந்த பிறகே செய்வதென்றால் அது சாத்தியமாகக்கூடியதாகத் தோன்றவில்லை. மனிதனுடைய தினசரி அனுஷ்டானங்களுக்கு ஒருவகை முறையை நிர்மாணம்செய்து வைத்துவிட்டால் அதை கஷ்டமின்றி பின்பற்றுதல் சுலபமெனக்கருதி ஆசாரபாகுபாடுகளை வரையறுத்த பெரியோர்கள் ஏற்பாடு செய்தனர்போலும்.

எல்லா தேயங்களிலும் ஆசாரவிதி கர்த்தர்கள் தோன்றி தமது நாட்டின் அபிவிர்த்திக்குரிய அனுஷ்டானங்களை ஒரு கட்டுப்பாடாக ஏற்பாடு செய்திருக்கின்றனரென்பது சமூக அமைப்பு விஷயங்களில் ஆராய்ச்சியுடைய எவருக்கும் எளிதில் அறியக்கூடிய விஷயம். தாம் ஏற்படுத்தும் ஆசாரங்கள் நீடூழிகாலம் நிலைபெற்று நினைத்த நன்மையை விளைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று அவர்கள் அவாவுவது இயற்கையே. இவ்விஷயத்தில் ஹிந்து ஆசார விதி கர்த்தர்கள் அடைந்துள்ள வெற்றிக்கு எந்த நாடும் சமமாகாது. அதன் காரணம் சற்று உற்று நோக்கின் புலப்படும். இப்பரத மக்களுக்கு பகவானிடத்தில் பரம பக்தி என்றும் நிறைந்த சுபாவம் இருந்ததை அவர்கள் தெரிந்துகொண்டு, அவரவர் தங்கள் தங்கள் விஷயங்களை மதத்துடன்சேர்த்துப் பகிரங்கப் படுத்தி பயன் பெற்றனர். அதே மாதிரி வைத்தியப் பயிற்சி மனிதனின் சுக வாழ்க்கைக்கு விதிக்கும் பல்வேறுபட்ட விதிகளையும், மதமயமாக்கி ஜனங்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற்று சுலபமாக தம் உத்தேசத்தை நிறைவேற்றிக்கொண்டனர்.

உதாரணமாக :— பிராத ஸ்நாநம் முதலியனவும் ஆகார நியமங்களும் வைத்திய முறைகளை யொட்டியே ஏற்படுத்தப் பட்டிருப்பினும் இத்தகைய சிறிய அனுஷ்டானங்களும் தெய்வவழிபாட்டின் ஓர் இன்றியமையாத பாகமாக ஜனங்கள் மதித்து அனுஷ்டித்து வருவது யாவரும் அறிந்ததே. அதனால்தான் இன்றுவரை— நவீன நாகரீகம் தன் தீய வேகத்தால் ஆசார அனுஷ்டானங்கள் வேறு, கடவுள் வழிபாடு வேறு என்ற பேத புத்தியை கற்பித்து பரப்பும் இன்றுவரை — அவைகள் அனுஷ்டானத்தில் இருந்துவருகிறது.

சரீர சௌக்கியத்துடன் சுகவாழ்வு வாழ விரும்பும் ஒவ்வொருவரும் வைதீகத்துக்கு அறிகுறியென்று நாம் கருதும் பிரா

சின ஆசார அனுஷ்டானங்களை தவறாமல் நியமத்துடன் முறைப்படி கடைப்பிடித்தொழிகிவரின் வைத்தியமுறைகளின் கட்டளைப்படியும் தம் வாழ்க்கையை நடத்திவருபராவர் என்பதில் ஐயமில்லை. எப்படி ஒவ்வொரு தனி அனுஷ்டானமும் தேக ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது என்பதை இனிவரும் சஞ்சிகைகளில் விஸ்தாரமாக ஆராய்வோம்.

திருவள்ளுவரும் மருந்தும்.

(N. சிவசுப்ரமணியம் எழுதுவது.)

திருவள்ளுவர் பெயரை வலுவில் இழுத்து அவர் செய்த நூல் என்று அனேகம் வழங்குகின்றன. அவ்வாதனையை ஒழித்து திருக்குறள் என்னும் தமிழ் வேதத்தில், ' திருவள்ளுவர் மருந்தென்னும் அத்தியாயத்தில் எழுதியதையே இங்கு கவனிக்க எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று துறைகளிலும் விசேஷமாக இறங்கியிருக்கிறார். யாதுகாரணம் பற்றியோ வீட்டைப்பற்றிமாத்திரம் அவர் எழுதவில்லை. மற்ற மூன்றிலும் தன் ஆன்ற அறிவை தெளிவாக விளக்கியிருக்கிறார். விவசாயி வயலிற்கு எருவிடுவதிலிருந்து அரசன் மந்திராலோசனை செய்வதுவரையிலுள்ள எல்லா முறைகளையும் ஒழுங்குபடவும், குறையில்லாமலும் எழுதியுள்ளார். அன்னார் மருந்தைப்பற்றியும் ஒரு அத்தியாயம் எழுதினது மிகவும் பொருத்தமுடைத்தே.

மருந்தென்னும் அத்தியாயத்தில் பத்துகுறள்களில், ஒன்றில் காரணங்களையும், ஆறில் நோயை தடுப்பான்முறையையும், மூன்றில் மருத்துவனையும், அவன் நோயை அறியும் வகையையும், அதுதணிக்கும் வகையையும் கூறியுள்ளார்.

அவர் நோய்களுக்குக் காரணம்கூறி அவை முன்வினையானும், உண்வானும், செயல்களானும் வருவன என்றார். முன்வினையான் வரும் சில நோய்கள், ஊழ்கழிந்தே தீரவேண்டியிருத்தலின், அதைத்தள்ளி மற்ற விலக்கக்கூடியதும், வியாதிகளுக்கு முக்கிய

காரணமாகிய உணவையும், செயல்களையும்பற்றி விவரிக்கிறார். உணவும், செயல்களும் மிகுதலும் குறைதலுந்தான் நோய்களுக்குக்காரணம். நோயே மூவகைப்பட்டது. பித்தத்தை சார்ந்தவை, வாதத்தை ஒட்டினவை, ஐயால்வருவன. அவர் முன் ஜாக்கிரதையையே மிகவும்போற்றுகின்றார். வியாதிக்கிடங்கொடுத்த பிறகு மருந்தைக்கொண்டு அதைத் தணிப்பதைக்காட்டிலும், முன்னரே வியாதி வாராமல் காப்பதுவே அவர் கூறும் முக்கிய புத்திமதி.

" வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக்கெடும் "

என்பதையே அவர் மருந்து விஷயத்திலும் திடப்படுத்துகிறார். உடம்பிற்கு வேண்டியவற்றை அறிந்து உண்டது ஜீரணமானபின் உண்டால் உடம்பிற்கு மருந்துவேண்டுவதில்லை. பெருதற்கு அரிய மானிட ஆக்கையை காக்கவேண்டின் உண்டது அற்றபின், அளவறிந்து ஆகார பதார்த்தங்களில் ஒன்றிற்கொன்று மாறுபடாதனவும், காலத்திற்கு மாறுபடாதனவுமான உணவை சாப்பிடு. நல்ல பசியெடுத்தபின்பே சாப்பிடு. பித்தம், வாதம், ஐ மூன்று தோஷங்களுக்கும் இடங்கொடாத ஆகாரமாயினும் தன் மனம் வேண்டிய அளவன்றி, குறைவாக அளவிட்டுகொள்ளு. ஆகாரத்தைக் குறைத்துக்கொண்டால் வாதம், பித்தம், ஐ முதலியவை நோய்செய்யாமல் இன்பம் பயக்கும். மானிடன் இவ்வியற்கை இன்பத்தைக்கொண்டு, மேலும், அறம், பொருள், இன்பம் வீடென்னும் நான்கையும் அடையவும் ஏதுவாயிருக்கும். அளவின்றி உண்டால் நோய்கள் எல்லாம் எல்லையில்லாமல் நாடிவரும் ; மானிடனை துன்பத்திற்கே ஆளாக்கும். இவ்விதமாக ஆகாரத்தைப்பற்றி ஜாக்கிரதை கூறுகின்றார். தற்காலத்து ஆன்றோர்கொள்கையும் வருமுன்னர் காப்பதாகத்தானிருக்கிறது. நோயை குணப்படுத்துவதற்கு எப்படியாயினும் சிறிது காலமாயினும் பிடிக்கும். அதுவரையில் நோயாளியும், மற்றோரும் வருந்த நேருகிறது. முன்பே, ஆசார நியமங்களாலும், மற்ற சுகாதார முறைகளாலும், பிணிகளை அண்டவிடாமல் தடுப்பதே முதன்மையானது. மருந்துசாலைகளைவிட, சுகாதார ஏற்பாடுகளே ஜனசமூகத்திற்கு நன்றிபயப்பன்.

நோய்களை தடுக்க இவ்வளவு எச்சரிக்கை கூறியும், நோய் வந்துவிட்டால் அதற்கு சிகிச்சை செய்யவேண்டியவழியும் கூறுகின்றார். முதலில் மருந்தை நாற் கூறாகப் பிரிக்கின்றார். நோயாளி மருத்துவன், ஔடதம், அதைகொடுத்துப் பக்கத்துதவுபவன் என நான்காகும்.

அவர் இந்த நான்கின் திறத்தை ஒட்டித்தான் பிணியைத் தீர்க்க வழிகூறுகின்றார். அதையடுத்து மருத்துவன் ஆராயவேண்டியதை புகலுகின்றார். மருத்துவன் நோயை முதலில் அறிந்து பிறகு அதன் காரணத்தையும் ஊகித்துணர்த்து, அதற்கு பெரியோர் அநுபவவாயிலாக விதித்த சிகிச்சையையும் நிச்சயிக்கவேண்டும். அறிஞனாகிய மருத்துவன் நோயை அறிவதுடன் நிற்காமல், அதனையுற்றவன் நிலையையும், பிணியின் வீரியத்தையும், கால நிலையையும் கண்டறிந்து பெரியோர்கள் நூல்வழி ஆராய்ந்து பின் தப்பாமல் சிகிச்சைசெய்யவேண்டும். இவ்விதம் நோயைத் தடுக்கவும், நோய் வந்தக்கால் அதை தணிக்கவும் வழி கூறுகிறார்.

தமிழ் வைத்தியம் அல்லது சித்த வைத்தியம்.

(பட... S. ...ராயண ஐயங்கார் எழுதியது.)

நமது தென்னாட்டில் அதிலும் விசேஷமாக தமிழ் ஜில்லாக்களில் வெகுநாளாகக் கையாண்டுவரும் வைத்திய முறையைப்பற்றி யோஜிப்போம். இம்முறையை சிலர் சித்த முறையென்றும், சித்தாயுர்வேத முறையென்றும் பலவாறாகப் பெயர் கூறினும் முடிவில் எல்லா வார்த்தைகளும் பொருள் ஒன்றையே குறிக்கின்றன. சித்த வைத்தியம் என்னும் பதம் பொதுவில் வடமொழி தென்மொழியிலுள்ள கிரந்தங்களைக் குறிப்பிடுவதாதலின் தெளிவாகப் பலரும் அறியும்விதம் தமிழ் வைத்தியம் என்றே கூறுதல் பொருந்தும். திருமூலர் முதலிய பதினெண் சித்தர்கள் தமிழ் வைத்திய நூல்களுக்கு ஆசியர்களாகக் கருதப்படுவதுபோல வடமொழி வைத்தியநூல்களுக்கும் ஆதிமர் முதலிய இருபத்தேழு சித்தர்கள் ஆசிரியர்களென மதிக்கப்படுகின்றனர். சிலர் காரணமின்றி தமிழ் நூல்களுக்குத் தனிப்பெயர் வழங்கக் கருதி புதிது புதிதாக அமைக்கத் தலைப்பட்டனர். ஆதியில் இவ்வித வழக்குகள் ஒன்றுமில்லாததால் பிரதான ஆசிரியர்கள் வடமொழி, தென்மொழி நூல்களுக்கு ஆயுள்வேதமென்றும் சித்தவைத்தியமென்றும் பொதுப்பெயர்களையே பெரும்பாலும் வழங்கிவந்தனர். தமிழ்நாடு நீங்கலாக மற்றநாடுகளில் இன்றும் பொதுப்பெயர்களை வழங்கிவருவதே இதற்கு அத்தாக்ஷி

ஒவ்வொரு சாஸ்திரமும் கடவுள் மூலமாகவே நம் முன்னோர்களுக்குக் கிடைத்ததாக இந்துக்கள் நம்புகின்றனர்.

அதில் பிரம்மன் மூலமாகவந்த முறைக்கு ஆயுர்வேதமென்றும், சிவன் மூலமாகக் கிடைத்த முறைக்கு சித்த வைத்தியமென்றும் பெயரிட்டனர். ஆயுர்வேதத்தில் மூலிகைகளின் உபயோகத்தைப்பற்றி விஸ்தாரமாகவும், சித்த முறையில் ரஸ, தாது, பாஷாணங்களின் குணங்களைப் பிரதானமாகவும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் எந்த பாஷையில் முறைகள் எழுதப்பட்டாலும், மேற்சொன்ன இரு பிரிவுகளுக்குள்ளே அது சேரும். ஆகையால் தனியாக ஒரு பெயர் வேண்டுவது அனாவசியமே. சித்தர்கள் தமிழ் நாட்டினர் என்றாவது அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றாவது சொல்லுவது நியாயமல்ல. ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த பாஷை கற்று பிறகு சித்தியடைந்தவர் பலர் உளர். அகஸ்தியர், ரோமரிஷி, மத்ஸ்யமுனி, கோரக்கர், சுந்தரானந்தர், முதலிய பல உத்தமர்கள் வடநாட்டில் பிறந்து, பிறகு தென்னாட்டில் குடியேறி தமிழில் பல கிரந்தங்களை இயற்றியிருப்பதால் சித்தர்கள் எல்லோருமே தமிழ் நாட்டில் உதித்தவர் எனக் கூறுதல் பொருந்தாது. அக்னியில் ஜயித்தரசம் முதலியவைகளை உபயோகித்து சரீரத்தை ஸ்திரப்படுத்தி நீண்ட ஆயுள்பெற்றவரே சித்தர். ஒரு தேசம், ஒருவகுப்பே இப்பெருமை கொண்டதெனக் கொள்ளல் உசிதமில்லை. ஆதியில் நம் பெரியோர்கள் யோகாப்பியாசத்திற்கு சரீரமே முக்கிய சாதனமாகையால் அச்சரீரம் வியாதியின்றி நீடூழி வாழ்க வழிதேடி கடைசியாக சில மூலிகைகளையும், ரசம் முதலிய சில தாதுக்களையும் பிரதானமாகக்கண்டுகொண்டனர். அதை சரிவர உபயோகித்து தாங்களும் தங்களையடுத்த சீடர்களும் ஆரோக்ய முற்று அம்முறைகளை உலகினருக்காக கிரந்தரூபமாகவும் வெளியிட்டனர். அவர்களுள் திருமூலர், அகத்தியர், மச்சமுனி, கருவூரார், போகர், தேரையர், இராமதேவர், சுந்தரர், பிர்மமுனி, ரோமரிஷி, சட்டமுனி முதலிய பதினெண்மர் முக்கியராவர். அவர்களிலும் நவசித்தர்களே ஆதி சித்தராவர். அகத்தியர் அருளிய அமுத கலைக்கியானத்தில் 216-வது பாட்டிலிருந்து 221-வது பாட்டு வரையில் இவ்விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளாவன :— கருவூரார் கொங்கணவர், சட்டமுனி, போகர், சுந்தரர், மச்சமுனி, கமலமுனி, இடைக்காட்டார், நந்தி, என்பவர்களே நவசித்தர். சட்டமுனி கர்பம் நூறில் 12-வது பாட்டில் இவ்விஷயம் உறுதிப்படுகின்றது.

“ கோனென்ற ஆதி முதல் ஒன்பதுபேர் சித்தர் கோடியாய் நவகோடி சித்தராச்சே ” இச் சித்தர்கள் ஒன்பது பேர்களுக்கும் ஜாதி விவரம் கூறப்பட்டுள்ளது. கருவூரார் குடிமகனென்றும், கொங்கணவர் பளிங்க சாதியென்றும், சட்டமுனி சேணியனென்றும், போகர் குயவனென்றும், சுந்தரானந்தர் ரெட்டியென்றும், மச்சமுனி செம்படவனென்றும், கமலமுனி கன்ஞனென்றும், இடைக்காட்டார் இடையனென்றும், நந்தி பிரமகுலமென்றும், மேற்சொன்ன கலைக்கியானபாடல்களில் வெளியாகின்றது. சித்தர்களில் பலர் அகத்தியரிடம் பூர்ணமாகக்கற்றவர்களென்றும், மற்றும் சிலர் சிற்சில அம்சம் *அவரிட மறிந்தார்களென்றும், ஆகவே எல்லா சித்தர்களும் அகத்தியர்பால் ஆசான்பக்தியுள்ளவர்களென்றும் அவரவர் நூல்களால் ஸ்திரப்படுகின்றது. ஆகையால் சித்தர்முறை முழுவதும் ஒருவழிப்பட்டதெனச்சொல்லுதல் பொருந்தும்.

சித்தர்காலம்.

இவர்கள் காலத்தைக் கணக்கிடுவது மிகவும் கடினமாகின்றது. போகர் ஏழாயிரத்தில் 41-வது பக்கத்திலிருக்கும் பாடல்களால் ராமன், ராவணன், புரூவசு, நளன், பாண்டவர் முதலிய அரசர்களை போகர் அறிந்திருந்ததாகத் தெரியவருகின்றது. ஊகிக்க வொண்ணாத ஒருகாலத்திலிருந்தே சிரஞ்சீவியாக சித்தர்கள் வசித்துவந்தார்களென்று சொல்லுதல் மிகையாகாது. துவாபரயுகத்தில் ராமன் முதலியோர் அரசாண்டன ரென்பது சரித்திர சம்பந்தமான வுண்மை.

சித்தர் சிரஞ்சீவிகள்.

வெகுகாலமாக ஒருவர் சரீரமழியாமல் உயிருடனிருக்கக் கூடுமோவென தற்காலம் பலர் சந்தேகிக்கின்றனர். சிரஞ்சீவி என்னும் விஷயம் பழையகாலங்களில் சரித்திரங்களில் விரிவாகக் கூறப்படினும், இக்காலத்தில் ஒருவரும் அவ்விஷயத்தை அறியக்கூடாமல் போனதுபற்றி வெகுநாள் வாழ்தல் என்ற பதமே பொருளற்றதாக பலர் கருதுகின்றனர். பிரத்தியக்ஷத்தில் அவ்விஷயம் இப்பொழுது நிரூபிக்கமுடியாவிடினும், அனுமானத்தால் ஒருவாறு காட்டக்கூடும். வியாதிகளைத் தடுக்கும் ஔஷதம், குணப்படுத்தும் ஔஷதம் என ஆங்கிலத்திலும், மருந்துகளை இருவகையாகப் பிரித்திருக்கின்றனர். வியாதிகளை அணுகவொட்டாமல் முன்ஜாக்கிரதையாக விலக்கும் மருந்துகளுக்கு தடுக்கும் ஔஷதமெனப்பெயர். வந்த வியாதிகளை நிவர்த்திசெய்யும் மருந்துகளுக்கு குணப்படுத்தும் ஔஷதமென்று

பெயர், இவற்றுள் முதல் சொன்ன விலக்கும் ஔஷதங்கள் புதிய புதிய முறையில் ஆங்கிலத்தில் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஹிருதயம், சுவாசப்பை முதலிய உள் உறுப்புகள் சீர்குலைந்தே சரீரத்துக்கு அழிவு உண்டாவதாக எல்லாரும் அபிப்பிராயப்படுகின்றனர். சீர்கெடும் அவ்வுறுப்புகளை பலப்படுத்தி நீண்டகாலம் சரீரத்தை நிலைகுலையாமல் செய்யக்கூடுமென்பது யுக்திக்கு பொருந்தக்கூடியதே. சில குறிப்பிட்ட வியாதிகளுக்கே விலக்கும் ஔஷதம் உளதெனக் கூறுதல் நியாயமில்லை. அம்மை முதலிய சில வியாதிகளை வரவொட்டாமல் தடுக்க மருந்து இருப்பதுபோல எந்த வியாதிகளாலும் சரீரத்துக்கு அழிவுவராமல் தடுக்கும் முறைக்கு கல்பமுறையென்றும், ரசாயன முறையென்றும் பெயர். இவைகளை உபயோகித்தால் சரீரத்தில் எவ்வித வியாதியும் அணுகாது என்பது பெரியோர்களின் எண்ணம். ரசாயன சாஸ்திரத்தில் (chemistry) ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்றுவது கடைசிப்படியாவதுபோல வைத்தியத்திலும் எவ்விதவியாதியும் அணுகாது சரீரத்தைப் பாதுகாப்பது கடைசிப்படியாகும். சுதேச வைத்திய சாஸ்திரங்கள் அக்கடைசிப்படியைப் பலவிதமாக உலகத்திற்கு விளக்கிக் காட்டுகின்றன. அதை பரீக்ஷித்தறியாமல் நமது சொல்ப அறிவைக் கொண்டு அதைத் தாறுமாறாக தூஷிப்பது மடமையாகும். சமீபத்தில் கிரந்தங்கள் செய்த பெரியோர்கள் நீடூழி வாழ்க்கையைவிரும்பி அவைகளை பரீக்ஷித்தறியாவிடினும் இருக்குமளவு சுகவாழ்வை விரும்பி சிலமுறைகளை அனுஷ்டித்திருக்கின்றனர். நாரசிம்ஹகிருதத்தை உபயோகித்து பலர் உள்ளவளவு நீடித்த ஆரோக்யம்பெற்றிருக்கின்றனர். இன்னும் அனுபவத்தில் அதன் குணத்தை நன்கு அறியக்கூடும். கல்பமுறைகள் செய்பாகம் சற்று கடினமாயிருப்பதுபற்றி பலர் அத்துறையில் இறங்காமல் கைவிட்டதால் தற்காலம் உலகினில் அம்முறை அபூர்வமாகிவிட்டது. சாமான்ய மருந்துகளிலும் சில செய்பாகம் கடினமானதுபற்றி வைத்தியர்களால் விலக்கப்படுவதை நேரிலும் பார்க்கலாம். ஆதரவிழந்து தவிக்கும் சுதேச வைத்திய சாஸ்திரங்களில் சிகிச்சைக்கு இன்றியமையாத பல பாகங்கள் மலினமாகக்கிடக்கும் இந்நாளில் கல்பமுறை மறைந்துவிட்டதென வருந்துதல் அதிகமே. நம் பூர்வீகர்கள் இக் கல்பமுறையை உபயோகித்து நீண்ட ஆயுளும் ஆரோக்யமும் படைத்தனர்.

வந்த துறை.

இச்சித்தர்கள் எழுதிய நூல்களுக்கு ஆதாரம் எவை? கடவுள் அருளால் தாங்களாகவே நூல்கள் இயற்றினரா? அல்லது கடவுள் அருளுடன் வேறு மொழியிலிருந்து எடுத்தனரா? சித்தர்

நூல்களில் அபிமானமுற்ற சிலர் வடமொழி தென்மொழி கிரந்தங்களுக்கு சற்றும் சம்பந்தமில்லையென்றும், சிலர் தென்மொழியிலிருந்தே வடமொழி நூல்கள் பல உதித்தனவென்றும், சித்தர் முறையென்பது தென்மொழிக்கே யமைந்ததென்றும், கூறுகின்றனர். இது சற்றும் நியாயமல்ல. சித்தர்கள் பெரும்பாலும் வடமொழியிலிருந்தே தங்கள் கிரந்தங்கள் அமையப்பெற்றனவென்று கூறுகின்றனர். போகர் ஏழாயிரத்தில் "உரைசெய்தேனீசருடைய வடமொழியைப் பார்த்து" "பாடினேன் வடமொழியைப் பிரித்துப்பார்த்து பரிவாக ஆத்தனைக் கேட்டு கேட்டு" என்று கூறுகின்றார். அகத்தியர் பரிபூரணத்தில் "வணங்கி மிக நிற்கையிலே வேதியோனும் வடமொழியைத்தான் கொடுத்தே யருளுமீய்ந்தார்" என்ற இரண்டாவது பாடலில் வணங்கிநின்ற அகத்தியருக்கு சிவனும் வடமொழி நூல்களைக்கொடுத்து அவைநன்றாக விளங்கும்படி கிருபையும் செய்தார் என்று ஸ்பஷ்டமாக தெரிகின்றது. பூரணம் ஏழாவது பாட்டில்தான் வடமொழியில் கற்றவைகளை பாஷையில் செய்ததாகவும் அகத்தியர் சொல்லுகின்றார். பூரணம் 364-வது பாட்டில் "பாடினது வடமொழிநூல் பாகமப்பா" என வடமொழி நூலையே ஆதாரமாகக்கொண்டதாக விளங்குகின்றது. ஆகையால் வடமொழி நூல்களையே மூலகிரந்தங்களாகக் கொண்டு தென்மொழியில் சித்தர்கள் உலகின் க்ஷேமத்தைக்கருதிப் பலநூல்களை வெளியிட்டனர் எனச்சொல்லுதல் நன்கு ஒவ்வும். வடமொழி என்பதற்கு வேறு பொருள் சொல்லுதல் சாத்தியமில்லை. தென்னாட்டிலேயே வடமொழி தென்மொழியென தமிழ் பாஷையை இருவகுப்பாக்கி வடமொழித் தமிழைப்பார்த்து தென்மொழித் தமிழில் பல நூல்வரைந்தனரெனக் கூறுவது விந்தையினும் விந்தையே. அப்பொழுது தமிழ்நாட்டில் கீழ்மொழி, மேல்மொழி நடுமொழி என பல பேதம்சொல்ல நேரிடும். தவிர வடமொழித் தமிழ் தென்மொழித்தமிழ் என இருவகைத் தமிழை இதுவரை கற்றோர் யாரும் கூறினரல்லர். நாளதுவரை வடமொழித்தமிழை யாருமறிந்திலர். சித்தரெல்லோரும் தென்மொழித் தமிழில் அபிமானம் கொள்ளவும், வடமொழித் தமிழைத் தள்ளவும், காரணம் யாதெனச்சொல்லுதல் அசாத்தியம். வடமொழித்தமிழில் இதுவரை ஒருசித்தரும் கிரந்தம் செய்ததாகத் தெரியவில்லை. ஆகையால் வடமொழிக்கு ஸம்ஸ்கிருதம் எனக் கொள்ளுதல் நியாயமாகும். "வேதியோனும் வடமொழியைத்தான் கொடுத்து அருளுமீய்ந்தார்" என்றும் வைத்திய காவியம் 1500-ல் 752-வது பாட்டில் "பராபரைக்கு மாலுரைத்தபடி நான் சொன்னேன்" என்றும்

அகத்தியர் கூறுவதால் சிவனிடமிருந்து பார்வதிக்கும் அகத்தியருக்கும் இம்முறைகள் கிடைத்ததென ஏற்படுகின்றது. வடமொழியிலும் சிவன் பார்வதிக்கு உபதேசித்த முறைகளே சித்தமுறைகளென வழங்குகின்றன. இச்சித்த முறைகள் தென்மொழியிலிருந்தே ஸம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டனவென்பதற்கு ஆதாரம் காட்டமுடியாது. சித்தமுறைகளில் பிரதான சரக்குகளாகிய ரசம், கந்தகம், பாஷாணம், லிங்கம், முதலிய வஸ்துக்கள் வடமொழியிலிருந்தும் வடதேசத்திலிருந்துமே கையாளப்பட்டு வருகின்றன.

தமிழ் பாஷை.

ரசம், கந்தகம், பாஷாணம், லிங்கம் என்ற பதங்கள் தமிழ் பாஷைகளில் ஒலிக்குத்தகுந்த எழுத்துக்கள் சேராமலும், எழுத்துக்குத்தக்க ஒலியில்லாமலும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதற்குக் காரணம் என்ன ? தெலுங்கு முதலிய சகல பாஷைகளிலும் ஒலியை அனுசரித்து எழுத்துக்களை ஏற்படுத்திக்கொண்டதுபோல தமிழ்பாஷையில் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. முதலில் தமிழ் பாஷைக்குவேண்டிய எழுத்துக்கள் மாத்திரம் ஏற்பட்டு பிறகு வேறு பாஷைகளிலிருந்து எடுத்துக்கொண்ட வார்த்தைகளுக்கு ஒலியை மாத்திரம் ஏற்று எழுத்துகளைச் சேர்த்துக்கொள்ளாததால் புதிய வார்த்தைகளை பழைய எழுத்துகளைக்கொண்டே சரிக்
ட்டினார்கள். ஆகையால் தமிழ்பாஷைகளில் ஒலி மிகுதியும் எழு
ப துக்குறைவும் நிறைந்துள்ளது. ஆங்கிலத்திலும் வடமொழியி
சா ள்ள பல ஒலிகளை யேற்றுக்கொண்டு எழுத்துகளை குறைத்து
ந ெ' போன்ற ஒருஎழுத்தின் ஒலிக்காக பலஎழுத்துகளை ஒன்றாக்கி
சித் எழுத்தாக பாவித்து உபயோகிக்கின்றனர். செந்தமிழ் பதங்
சித்த அவைகளிலடங்கிய எழுத்துக்களுக்குள்ள ஒலியே தொனி
க்கில் து. தமிழ் பாஷை மற்றொரு பாஷையிலிருக்கும் சாஸ்திர
தோ தன்பாஷையில் ஏற்றுக்கொள்ளப் புகுந்ததுதான் எனக்
செ ும். ஆங்கிலத்தில் வைத்தியசாஸ்திரம் புதிதாக ஏற்படும்
முன்னிருந்த லேடின் வைத்திய சாஸ்திர பதங்களை அப்
ங்கீகரித்ததுபோல தமிழ்பாஷையிலும் வைத்தியம் முதலிய
ளை விவரிக்கும்போது ஸமஸ்கிருத சாஸ்திரத்திலுள்ள
அப்படியே அங்கீகரித்து மேஷம், விருஷபம், முதலிய
சாதிடமும், வச்யம், ஆகர்ஷணம், ஸ்தம்பநம், முதலிய
திரசாஸ்திரமும், கோஷ்டம், கஸ்தூரி, கோரோசனை,
பதங்களை வைத்தியமும் சேர்த்துக்கொண்டது.
க்கு ஏற்பட்டுள்ள எழுத்துகளுக்கு ஒவ்வாத ஒலி

களை எந்த சாஸ்திரத்தை முன்னிட்டும் ஒப்புக்கொள்ளவில்லையென்பது பிரசித்தம். ஸம்ஸ்கிருதம் உன்னத நிலைமையிலிருக்கும் காலத்தில் உலகத்திலுள்ள எந்த பாஷையிலும் இதிலில்லாத அபூர்வ சாஸ்திரங்கள் இருந்ததில்லை. அக்காலத்தில் எல்லா ஜனங்களும் சாஸ்திரங்களையறிய விரும்பி பொது பாஷையாகக்கருதினார்கள். வேறு பாஷைகளிலிருந்து பதங்களை ஸம்ஸ்கிருதத்தில் சேர்க்கக்கூடாதெனவும் தடை ஏற்படுத்தினார்கள். பொது பாஷைக்கு அதிலும்வைத்தியம்முதலிய சாஸ்திரங்களை யடைந்தபாஷைக்கு புதிய பாஷை பதம்சேருவதால் மிக பாதகம் விளையுமென்று நினைத்தே தடை ஏற்படுத்தினதாகவும் கூறலாம். லேடின் முதலிய சகல பாஷைகளிலும் சாஸ்திர சம்பந்தமான பாகங்களில் பல ஸம்ஸ்கிருத பதம் கலந்திருப்பதைக்காணலாம். அவ்விதமே தமிழிலும் ஸம்ஸ்கிருத பதங்களை ஏற்றுக்கொண்டு அதற்கு சில விதிகளையும் இலக்கணத்தில் ஏற்படுத்திக்கொண்டனர். இதனால் இந்த இரண்டு பாஷைகளுக்கும் சகோதரபாவம் அதிகமாயிற்றெனச் சொல்லலாம். வடமொழியிலிருந்து விஷயங்களை ஏற்றுக்கொண்ட காரணத்தால் தமிழ் ஸம்ஸ்கிருத வைத்தியங்களுக்கு ஏற்றத்தாழ்வு கூறுவது பேதமையாகும். ஒரு ஆசானிடமிருந்து கற்ற சீடன் ஆசானைவிட புத்திமானாகவிருப்பது உலகத்தில் தெரிந்தவிஷயமே; தமிழ் கிரந்தங்களில் பல அபூர்வமான முறைகள் இருப்பது யாரும் அறிந்ததே.

தமிழ் வைத்திய சரக்குகள்,

தமிழ் வைத்திய சரக்குகள் பெரும்பான்மையாக வடநாட் ... ள்ளவைகளெனவே கூறலாம். கோஷ்ட்ம் என்ற சரக்கு ... பர்வதத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றது. வடமொழி ... அதற்கு கோஷ்டம் எனவே பெயர். கஸ்தூரியும் இ... குங்குமப்பூ, பச்சை கற்பூரம், சாலாமிசிரி, பேரீச்சம்பழம், அபின், கசகசா முதலிய பல வஸ்துக்கள் வட இந்தியா... ஏற்றுமதியாகின்றன. அச்சரக்குகள் முழுவதும் தமிழ் ... முறையில் உபயோகப்படுகின்றன. ஆனால் ... உண்டாகும் சில மூலிகைகள் வடமொழி வைத்திய ... சேருவதில்லை. அகத்தியர் வைத்தியகாவியம் 805-... ஓர் மருந்துக்கு கண்டாத்திரி லேகியம் எனப்பெயரி... டார்த்ரக லேஹியம் என்ற வடமொழிப்பெயர் ... கொண்டதென அறிந்தவர் சிலரே. அகத்தியர் ... 536-வது பாட்டில் ஒரு மருந்துக்கு கோடாசூரி ...

ல, உ ... த் ... அ ... ஓ ... தன் ... வப் ... ம ... ம. ... பூ ... ல், ... தே ... திய ... டில் ... களில் ... ட்டில் ... கண் ... திரிபு ... காவியம் ... பரிட்டிரு ... னா

க்கின்றனர். ஸம்ஸ்கிருதத்தில் அசுவகஞ்சுகம் என்ற மருந்தை அசுவமென்றால் குதிரையென்றும் கஞ்சுகம் என்றால் ரவிக்கையென்றும் அர்த்தத்தையொட்டி ஹிந்தியில் கோடா ஜூரி என்று பெயரிட்டனர். கோடா என்றால் குதிரை ஜூரியென்றால் ரவிக்கையென ஹிந்திபாஷையில் பொருள். அகத்தியரும் ஹிந்தி பெயரையே தன் கிரந்தத்திலும் உபயோகித்தனர். லேகியம், கிஷாயம், முதலிய முக்கியபதங்களே வடமொழியைச்சேர்ந்தன. இவ்விதம் இன்னும் பல உதாஹரணங்கள் காட்டக்கூடுமாயினும் கிரந்த விரிவு பற்றி இதனுடன் நிறுத்துகின்றேன்.

சித்தர் நூல்கள்.

சித்தர் நூல்களில் பலவித பிதற்றல் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். அது பொருத்தமுள்ளதல்ல. ஞானம், வைத்தியம், வாதம், இம்மூன்றையும் கலந்து பல நூல்கள் வெளிவந்திருப்பது உண்மையே. ஒவ்வொரு மனிதனும் இம்மூன்றையும் அறிய வேண்டிய அவசியத்தை யனுசரித்து மூன்றும் ஒவ்வொரு கிரந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. பல வஸ்துக்கள் நிறைந்துள்ள கடையை ஒருவஸ்து வாங்குபவரும் விரும்புமாப்போல இந்நூல்களில் வேண்டிய பாகத்தை அவரவர் எடுத்துக்கொள்ளக்கூடும். அவை கலக்காமலும் தேரையர்போன்ற பலநூல்களும் உள. சித்தர் நூல்களில் பல இலக்கணப்பிழைகள் நிறைந்துள்ளதென்றும் பாடல்கள் பொருத்தமுள்ளவைகளல்லவென்றும் சிலர் நினைப்பது சரியல்ல. சாஸ்திர விஷயங்கள் பலருக்கும் புலப்படும்படி எளிய நடையில் தொகுப்பதே நியாயமாகும். பெருமைக்குறைவாக சித்தர் நூல்களில் யாதும் கூறப்படவில்லையென்பது திண்ணம். சித்தர்களும் பல தேசசஞ்சாரம் செய்து பலவிஷயங்களையறிந்திருக்கின்றனர். போகர் ஏழாயிரத்தில் " சீனபதிதன்னிற்சென்று தோற்றமுடன் காலாங்கி நாதர் பக்கல்" என்று சீனதேசம்தான் சென்று வித்தைகற்றதாகக் கூறுகின்றனர்.

ஒற்றுமை.

வடமொழி சித்தர்களில் ஆதிமர் என்றவரே அப்பதத்தின் பொருளையொட்டி தமிழில் திருமூலர் என நாமம் படைத்ததாக கூறலாம். திருமூலர் என்ற தமிழ்பதமே வடமொழியில் ஆதிமர் எனமாறியது எனகூறினும் குற்றமில்லை. எவ்விதமாயினும் இந்த இரண்டு சித்தர்களுக்கு ஒற்றுமையுண்டென்பது திண்ணம். கோரக்ஷர் என்ற வடமொழி சித்தர் கோரக்கர் என தமிழ்நாமம் படைத்தனர்.

210144

வைத்திய சாரம்.

முகவுரை.

"வியாதியை நன்கு பரீக்ஷித்து தெரிந்தபிறகுதான் அதற்கேற்ற ஔஷதம் தேடவேண்டும். இவ்விரண்டுமறிந்தே நோயாளிக்கு சிகித்சை செய்யப்புகவேண்டும்" என்று சரகர் சொன்னபடி வியாதிகளின் குணங்களையும், ஔஷதங்களின் குணங்களையும் ஆராய்வது வைத்தியனுடைய கடமையாகின்றது. அதிலும் முதன்மையாக வியாதி குணங்களை அறிதல்வேண்டும். வியாதியின் காரணங்களும் அதன் லக்ஷணங்களுமே வைத்தியசாஸ்திரத்தில் முக்கிய பாகமாகக்கருதப்படுகின்றன. மூன்று ஸ்கந்தம் அல்லது பாகமாக வகுக்கப்பட்ட சுதேச வைத்திய நூல்களில் ஹேது, லிங்கம், என்ற இரண்டு ஸ்கந்தங்கள் அல்லது பாகங்கள் இவற்றையே கூறுகின்றன. வியாதிகளின் காரணங்களைக்கூறும் பாகத்திற்கு ஹேது ஸ்கந்தமென்றும் அவைகளின் லக்ஷணங்களைச் சொல்லும் பாகத்திற்கு லிங்கஸ்கந்தமெனவும் கூறுகின்றனர். இவற்றை கூறும் சாஸ்திர பாகத்திற்கு பேதாலஜி Pathology என ஆங்கிலத்திலும் நிதானம் என வடமொழியிலும் அழைக்கின்றனர். சஸ்திர சிகித்சையில் பிசியாலஜி என்ற உடல் கூறுசாஸ்திரம் முக்கியமானாற்போல மருந்தில் நிதானம் பிரதானமாகின்றது. இதையறியாமல் செய்யும் வைத்தியத்திற்கு மூட வைத்தியமெனப்பெயர். வஸ்துக்களின் குணங்களை அறியாமல் அவைகளை உபயோகிப்பதுபோல வியாதியை யுணராது மருந்தை யுபயோகிப்பதும் அவிவேகமே. ஆகையால் வியாதியை யறியாது செய்யும் சிகித்சை பலனளித்தாலும் அது சிலாக்கியமல்லவென்றும் அவர்களுக்கு அரசர்கள் தக்க சிக்ஷை விதிக்கவேண்டுமென்றும் வழியறிந்து சிகித்சைசெய்பவனே தகுந்த வைத்தியனென்றும் அரசர்கள் அவனுக்கு வெகுமதியளிக்கவேண்டுமென்றும் வாக்படர் கூறுகின்றனர். சாஸ்திரமறியாப் போலிகளை ஆங்கிலர் தூற்றுவதுபோல நம் பெரியோர்களும் அவமதித்திருக்கின்றனர். காய்ச்சல் முதலிய சில வியாதிகளை வைத்தியரல்லாத பலரும் அறிவரென்பது உண்மையே. ஆகிலும் அவ்வறிவுமாத்திரம் சிகித்சைக்குப் போதுமானதல்ல. வியாதியின் மூலகாரணங்களும் வியாதிகளால் சரீரத்தில் உண்டாகும் இயற்கை மாறுபாடுகளும் அம்மாறுபாடுகள் எவ்விதம் சீர்திருத்தக்கூடுமென்பதும் ஆகிய இம்மூன்றும் வியக்தமாக அறிந்தாலல்லது சிகித்சை பலனளிக்காது. சில சுதேச வைத்தியர்கள் இவையொன்றுமறியாமல் வைத்தியம் செய்வது உண்மையே. ஆனால் அதுதான் சுசேத

வைத்திய சாஸ்திரக்கொள்கையென நினைக்கக்கூடாது. ஆங்கிலத்திலும் சிலர் ஒன்றுமறியாது சில மருந்துகளை மாத்திரம் தெரிந்துகொண்டு வைத்தியம் செய்வது இன்றைக்கும் பார்க்கலாம். ஆனால் அது ஆங்கில சாஸ்திரக்கொள்கையல்ல இந்த நிதானம் முற்றிலும் வாதம், பித்தம், சிலேஷ்மம் என்கிற முத்தோஷங்களையே அஸ்திவாரமாகக்கொண்டுள்ளது. முத்தோஷங்களை நன்கறிந்தபின்னரே சுதேச வைத்திய சாஸ்திரம் விளங்கும். முத்தோஷங்களை விவரிக்கப்புகின் கிரந்தம் விரியுமாதலின் திரிதோஷ நிர்ணயம் என சந்திரிகையில் வெளிவரும் தலையங்கத்தில் காணலாம். சுதேச வைத்திய சாஸ்திர ரீதியாக வைத்தியம் செய்பவர்களுக்கு முத்தோஷகியானம் இன்றியமையாத சாதனமாகின்றது. ஆங்கில முறைக்கு இது கொஞ்சமேனும் அவசியமில்லை. வியாதிகளின் காரணமும், உட்பிரிவும் வேறு வழிகளால் ஆங்கில முறையில் வியவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றது. ஆங்கிலத்திலும் சுதேச வைத்தியமுறையிலும் வியாதிகளுக்கு காரணங்கள் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:— உள் காரணங்கள், வெளிக்காரணங்கள். உட்கொள்ளும் ஆகாரம் முதலியவைகளால் உண்டாகும் வியாதிகள் உட்காரணங்களால் உண்டாகியவையென்றும், கெட்ட காற்று ஜலம் மாறுபட்ட சீதோஷ்ணங்கள் கிருமிகள் இவைகளால் உண்டாகும் வியாதிகள் வெளிக்காரணங்களால் உண்டாகியவையென்றும் சொல்லப்படுகின்றன. ஆங்கில வைத்தியத்தில் வெளிகாரணங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. பற்பல புழுக்களால் வியாதிகள் உண்டாவதைப்பற்றியும் அப்புழுக்களின் சுபாவங்களைப்பற்றியும் ஆங்கில முறை விவரிக்கின்றது. இவற்றால் சிகித்தை முறையில் விசேஷ பலனில்லாதது காரணமாக சுதேச வைத்திய முறை புழுக்களைப்பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. உலகினில் எல்லா வியாதிகளும் புழுக்களாலேயே உண்டாகின்றவென்பது சுதேசவைத்திய சாஸ்திரங்களின் நோக்கம். சுதேச வைத்திய சாஸ்திரங்களிலும், ஆங்கில நூல்களிலும் வியாதிகளின் நிதானத்தைப்பற்றி கொண்டுள்ள அபிப்பிராயத்தை அறிவது இருவகை வைத்தியர்களுக்கும் அவசியமாகையால் இந்நூல் எல்லா வைத்தியர்களுக்கும் மிக்க உபயோகமுள்ளது என்பது திண்ணம்.

பண்டிட் S. நாராயண ஐயங்கார்.

ஜ்வரம்.

உலகினில் உள்ள வியாதிகள் எல்லாவற்றிலும் மிகக் கொடுமையானது ஜ்வரம். இது அநேகமாக ஒவ்வொரு வியாதியுடன் கலந்துமிருக்கும். கலக்காமல் தனியாகவும் இருப்பதுண்டு. கலந்திருக்கும் காலங்களில் அங்க ஜ்வரமெனப் பெயர் படைத்திருக்கும். கலக்காத காலங்களில் பிரதான ஜ்வரமென சொல்லப்படும். அங்க ஜ்வரம் மற்றொரு பிரதான வியாதியை யொட்டியிருக்குமாதலால் அவ்வியாதியை தணிக்கும் காலத்தில் தானாக மருந்தின்றி அங்கஜ்வரம் தணிந்துவிடும். அப்படி தணியாவிடில் தனியாக ஜ்வரத்திற்கு சிகித்சைசெய்யவும் நேரிடுவதுண்டு. உதாரணமாக க்ஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். க்ஷயத்துடன் சேர்ந்து வரும் காய்ச்சலுக்கு தனியாக மருந்து செய்யவேண்டிய அவசியம் அநேகமாக நேரிடாது. க்ஷயத்திற்கு செய்யும் சிகித்சையால் க்ஷயமும் அதையொட்டிய காய்ச்சலும் மற்ற வியாதிகளும் தானாகவே நீங்கிவிடும். ஆனால் எந்த வியாதியுடன் காய்ச்சல் சேர்ந்தாலும் அந்த வியாதி கஷ்டசாத்தியமாகின்றது. அதாவது காய்ச்சல் சேராத காலத்தில் அந்த வியாதி எவ்வளவு சுலபமாக விலக்கமுடியுமோ அவ்வளவு சுலபமாக காய்ச்சல் சேர்ந்த காலத்தில் விலக்க முடிவதில்லை. அந்த வியாதிகள் காய்ச்சல் நீங்கலாக மற்ற வேறு அங்க வியாதிகளுடன் கலந்திருந்தால் முரண்படுவதில்லை. ஆகையால் காய்ச்சல் கலந்த வியாதிகளை வைத்தியர்கள் மிகவும் ஜாக்கிரதையாக கவனித்தல் வேண்டும். கல்லீரல், மண்ணீரல், சுவாசப்பை, ஹிருதயம், முதலிய உள்ளுறுப்புகள் யாவையும் அழிப்பதில் காய்ச்சலுக்குள்ள சக்தி மற்ற வியாதிகளுக்கு கிடையாதது பற்றி ரோகபதியென இவ்வியாதிக்குப் பெயரிட்டனர். மற்ற பல வியாதிகள் மனிதர்களுக்கு மாத்திரம் வருவதுபோலன்றி காய்ச்சல் எல்லா ஜீவராசிகளுக்கும், புல், பூண்டு, முதலியவைகளுக்கும் வரக்கூடிய பொது வியாதியாக சுதேச வைத்திய நூல்கள் கூறுகின்றன. மனிதர் நீங்கலாக மற்றவை இவ்வியாதி அணுகியவுடன் அழிந்துவிடுகின்றன. ஆகையால் இதன் முக்கியத்தை யுணர்ந்து முதன்முதலாக இவ்வியாதியையே ஆயுர்வேத நூல்கள் விஸ்தாரமாக கூறுகின்றன. சரீரத்தில் இனி உண்டாகப்போகும் வியாதிக்கு முன்னணியில் வரும் பல குறிகளுக்கு ஜ்வரமெனப்பெயர் என்று ஆங்கில நூல்கள் சொல்லுகின்றன. சோம்பல், பசியின்மை அரோசகம், தாபம், இவைபோன்ற குறிகளுக்கு ஜ்வரமென்று பெயர்.

இவைகளால் இனி சரீரத்தில் உண்டாகும் மாறுபாடு குறிப்பிடப்படுகின்றது. ஆகையால் ஜ்வரமென்பது ஒரு தனி வியாதியல்லவென்பது அவைகளின் பொருள். சுதேச வைத்திய நூல்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. வியாதி என்பது ஆரோக்யம் என்பதற்கு நேர்விரோதமான பதம். முன்சொல்லிய சோம்பல், பசியின்மை, தாபம், முதலிய குறிகள் வியாதியில் சேர்ந்ததா? அல்லது ஆரோக்யத்தில் சேர்ந்ததா? ஆரோக்யத்தில் சேர்ந்ததென யாரும் ஒப்புக்கொள்ளமுடியாது. அப்படியாகில் பசியின்மைக்கு மருந்து பெற்றுக்கொள்ள எவரும் வைத்தியரை அணுகமாட்டார். அக்குறிகளும் வியாதியென்றுதான் சொல்லுதல் பொருந்தும். குறிகள் வியாதியெனில் ஜ்வரமும் வியாதி வரிசையில்தான் சேரும். இக்காய்ச்சலுக்கு பிரதான லக்ஷணம் தாபமே. நாடிவேகமாய்நடத்தல், சுவாசநடை அதிகரித்தல், பசியின்மை, நாக்கில் மாசுபடிதல், அக்னி மந்தப்படுதல், மூத்திரம் குறைவுபடுதல், மூத்திரம் மஞ்சள் நிறமாகுதல், சோம்பல், தலைவலி, புலம்பல், ஆகிய இக்குறிகள் அநேகமாக எவ்வகை காய்ச்சலிலும் புலப்படும். ஒவ்வொரு காய்ச்சலும் ஒவ்வொருவித புழுக்களாலேயே உண்டாவதாக மதிக்கப்படுகின்றது. அப்புழுக்கள் முதலில் சரீரத்துள் செல்லுகின்றன. பிறகு சரீரத்தில் நூற்றுக்கணக்காக பெருகி சரீர இயற்கைக்கு ஒவ்வாத விஷத்தை யுண்டாக்குகின்றன. ஒவ்வொரு புழுவும் அதற்கேற்றவாறு வெவ்வேறுவிதமான விஷத்தை யுண்டுபண்ணுவதால் அதை யொட்டி காய்ச்சலும் பலவகைப்பட்டதாகின்றது. அதன் குறிகளிலும் சில இலேசான மாறுபாடுகள் உண்டாகின்றன. இது மாத்திரமின்றி அப்புழுக்களையொட்டி சில விசேஷக்குறிகளும் அக் காய்ச்சல்களில் தோன்றுகின்றன. இக்காய்ச்சலில் கடுமையின் வித்தியாசங்களைக் கூட இதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். அந்தந்த புழுக்களுக்கு மாத்திரம் ஏற்படக்கூடிய சில வெளிக்குறிகளைக்கொண்டு காய்ச்சலின் வகுப்பை ஊகித்தறியலாகும். காய்ச்சல் முழுவதும் ஒட்டுவாரை யொட்டியென்று சொல்லப்படுகின்றது. ஆனால் அது தன் இனத்தை யொட்டியே யிருக்கும். பெரிய அம்மை காய்ச்சல் அணுகியவருக்கு ஒட்டும் காலத்தில் அதன் இனத்தை யொட்டி பெரிய அம்மை காய்ச்சலாகவருமேயொழிய வேறு இனமாகயிராது. காய்ச்சல் திடீரென புதிதாக உண்டாவதில்லை. ஏற்கெனவே அந்தந்த இடங்களில் அவ்வியாதி முந்தி நிலைபெற்றிருந்துதான் பிறகு விசேஷமாகப் பரவுகின்றது. அப்படி பரவும் காலங்களில் ஜனங்களுக்கு அவ்வியாதி விசேஷமாகத் தெரிகின்றது. அது ஒட்டுவாரை யொட்டியாக பரவிவந்தபோதிலும் ஆரம்பத்தில் எங்கிருந்து வந்ததென்பது சில சமயங்களில் கண்டுபிடிக்க முடியாமல்போகலாம்.

ஆனால் அந்த ஒட்டுவாரை யொட்டியே பரவிவந்ததென்பதில் ஆக்ஷேபணையில்லை. பலகாய்ச்சல்கள் உடை, காற்று, ஜலம், பால் இவைகளாலேயே ஒட்டுவாரை யொட்டியாகப் பரவுகின்றன. சிலகாலங்களில் அப்புழுக்கள் வியாதிகளை விஸ்தரிக்கக்கூடிய சில சாதனங்களின் குறைவால் வெளிக்குத்தெரியாமல் மறைந்திருக்கின்றன. அச்சாதனங்கள் நிறைந்தவுடன் வியாதிகளைப் பரப்ப ஆரம்பிக்கின்றன. அந்நிலைமையில்தான் ஒட்டுவாரை யொட்டியாகின்றன. காலதேச நிலைமையை யனுசரித்து இப்புழுக்கள் சரீரத்திற்கு வெளியிலும் ஜீவதசை பெற்றிருந்தால் அப்பொழுது மிக விஸ்தாரமாக ஒட்டுவாரையொட்டியாகப் பரவுகின்றன. அப்படியில்லாவிடில் நோயாளியின் சம்பந்தத்தை யொட்டியே இவ்வியாதி மற்றவருக்கு பரவுகின்றது. இவ்விருவகையாலும் பரவும் வியாதி ஒட்டுவாரை யொட்டியென அழைக்கப்படுகின்றது. இப்புழுக்கள் சரீரத்தில் வியாபித்து பிறகு ஏற்படும் வியாதிக்குறிகளுக்கு அப்புழுக்களே நேர்முகமாகக் காரணமாவதில்லை. அப்புழுக்களால் உண்டாகும் ஓர்வித விஷமே காரணமாகின்றது. ஆகையால் அப்புழுக்கள் சரீரத்தில் நுழைந்து, அதுபெருகி, விஷம் உண்டாக சிலகாலம் அந்தந்த இனத்திற்கு தக்கபடி தாமதமாகின்றது. புழுக்கள் சரீரத்தில் நுழைந்ததற்கும் வியாதியை யுண்டாக்கக்கூடிய விஷம் சரீரத்தில் சேகரமாவதற்கும் நடுவிலுள்ள காலத்திற்கு இன்குபேஷன் பீரியட் (Incubation period) என்று ஆங்கிலத்திலும் சயகாலம் என வடமொழியிலும் சொல்லுவார்கள். ஒவ்வொரு காய்ச்சலிலும் இக்காலவளவு வித்தியாசப்படுகின்றது. ஆகையால் இக்காலவளவு கழியும்வரை ஒருவன் சரீரத்தில் வியாதிப்புழு நுழைந்துள்ளதா அல்லவா என்பதைகண்டுபிடிக்க முடியாது. தவிர ஒவ்வொரு காய்ச்சலிலும் இக்காலவளவு அனுபவத்தில் கண்டு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இக்காலவளவுடன் ஒன்று அல்லது இரண்டு நாட்களை அதிகமாகச் சேர்த்து அதை விலக்குங்காலமாக நினைக்கின்றார்கள். அதாவது காய்ச்சலுள்ள ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சஞ்சாரம்செய்யும் ஒரு மனிதனால் அவ்விடத்திற்கு அவ்வியாதி பரவாமல்தடுக்க அது விலக்கும் காலமாகின்றது. அக்காலம் வரையில் அவன் தனியாக ஒதுக்கப்படவேண்டும். தவிர அதுவரை அவ்வியாதியுள்ளவனாகவே அவன் கருதப்படவேண்டும். அக்காலம் நீங்கினபிறகே அவன் வியாதியற்றவனாக மதிக்கப்படுகின்றான். உதாரணமாக பெரியம்மை எல்லா வயதிலும் வரக்கூடியது. 12-நாள் சயகாலம், 16-நாள் விலக்கும் காலம். கக்குவாய் இருமல் குழந்தை பிராயத்தில் வரக்கூடியது. 5 முதல் 18 நாள் சயகாலம். 21-நாள் விலக்கும் காலம். இன்புளுயன்சா என்கிற கபசன்னிபாதசுரம் எல்லா வயதிலும்வரும். 2 முதல்

6 நாள் சயகாலம் 7 நாள் விலக்கும் காலம். இக்காய்ச்சலை யுண்டுபண்ணும் புழுக்களை சரியாகக் கண்டுபிடித்தல், அவைகளுக்குச் சரியான சிகித்சை முறைகளைக் கண்டுபிடித்தல், இப்புழுக்கள் மூலமாக வியாதி பரவும்படி செய்யும் பூச்சிகளைக் கண்டுபிடித்தல், ஆகிய இம்மூன்று விஷயங்களில் மிக கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. சுதேசவைத்திய நூல்கள் இப்பூச்சி புழுக்கள் முதலியவைகளின் லக்ஷணங்களை விரிவாகச்சொல்லாமல் பொதுவில் சுருக்கமாகக்கூறுவது உண்மையே. சிகித்சை முறையில் இவைகளுக்கு அதிகபலன் இல்லாததுபற்றி உபேக்ஷித்தன. வியாதியைத் தீர்மானித்து உடனே அதற்குவேண்டிய சிகித்சைமுறையை கைப்பற்றவேண்டியதே வைத்தியன் கடமை. பின் சொன்னவைகளில் முதல் விஷயத்தைப்பற்றியவரையில் ஆங்கில வைத்யர்களும் கண்டுபிடிக்கவேண்டிய பாகம் பலவுள. இரண்டாவது விஷயத்தைப்பற்றியவரையில் ஆங்கில வைத்தியர்கள் தற்காலம் காய்ச்சலை யொழிக்க உபவாசம் விதிப்பதை விட்டு போஷணையையே பெரிதென நினைக்கின்றார்கள். ஆனால் முன்னொருகாலத்தில் அவர்கள் காய்ச்சல் நோயாளிகளுக்கு உபவாசம், சரீரத்திலிருந்து ரத்தம் வெளியேற்றுதல், விரேகித்தல் ஆகிய முறைகளை நடத்தியதுண்டு. இவ்விதம் செய்வதால் காய்ச்சலின் பலம் குறையுமென நினைத்தார்கள். ஆனால் இக்காலத்தில் கூடியமட்டில் நோயாளிக்கு பலத்தை யுண்டுபண்ணவேண்டுமென்று நினைக்கிறார்கள். அவ்விதம் நோயாளிகளுக்கு தகுந்த பலமுண்டுபண்ணினால் அவன் சரீரத்தில் புழுக்களால் உண்டான விஷத்திற்கு முறிவாக இயற்கையிலேற்பட்ட காரியங்கள் செவ்வனே நடைபெறுகின்றன என்பது அவர்கள் அபிப்பிராயம். இவ்விடத்தில் சுதேச வைத்திய நூல்கள் மாறுபாடான அபிப்பிராயம் கொடுக்கின்றன. எல்லா வியாதிகளையும் ஆரம்பத்தில் அணுகவொட்டாது எதிர்க்கும் சுபாவம் சரீர இயற்கையில் ஏற்பட்டதென்று வாக்படர் கூறுகின்றார். ஒவ்வொரு வியாதியும் இயற்கைக்கு மாறுபட்டதே. இயற்கையின் மாறுபாட்டிற்கே வியாதியெனக்கூறுகின்றார். அவ்வியற்கை தன்னை தொந்திரவு செய்யப்புகும் ஒவ்வொன்றையும் தன்னால் கூடியவளவு எதிர்க்கின்றது. அக்காலத்தில் இயற்கையை வெல்லமாட்டாது வியாதி சமயத்தை எதிர்பார்க்கின்றது. இயற்கைப்பலம் குறையும் காலத்தில் வியாதி பூர்ணபலம் பெற்று இயற்கையை ஜயித்து தன் வேலையைத் தொடங்குகின்றது. சரீர இயந்திரத்தை முதலில் கெடுக்கின்றது. அக்காலத்தில் பூர்ண ஓய்வு கொடுத்து வேறு வகைகளால் சீர்திருத்தவேண்டியது நியாயமென நினைக்கின்றனர். அக்காலத்தில் சரீரத்திற்கு கொடுக்கும் பலத்

தால் நினைத்தபடி சரீரம் பலனடையாமல்போவதுடன் வியாதியே பலனடைகின்றது. அனுபவமும் போஷணையைவிட உபவாசமே நன்கென காட்டுகின்றது. வியாதிகளுக்கு காரணமாகிய இவ்விஷத்திற்குத் தகுந்த முறிவு மருந்துகள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. மூன்றாவது விஷயத்தைப்பற்றியவரையில் மலேரியா என்ற விஷசுரமும், யானைக்கால் வியாதியும் சில கொசுக்களால் பரவுகின்றதென்றும், டைபாயிட் என்ற ஸந்தத சுரமும், ஸ்லீபிங் ஸிக்னஸ் என்கிற ஸந்யாஸமும் சில பூச்சிகளால் பரவுகின்றதென்றும் ஆங்கிலநூல்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருப்பினும் அதிக பலனில்லாததுபற்றி சுதேச நூல்கள் அதில் கவனம் செலுத்தயில்லை. கல்பமுறைகளைத்தவிர வேறு மருந்துகளால் காய்ச்சல் வராமல் மின்ஜாக்கிரதையாகத் தடுப்பது எந்த வைத்தியர்களுக்கும் சாத்தியமானதாக விருக்கவில்லை. காய்ச்சலை போக்குவதற்கு இரண்டு வழியுண்டு முதல் — சரீரத்திலிருக்கும் புழுக்களை அழித்தல். இரண்டு — அப்புழுக்களால் சரீரத்திற்கு பாதகம் ஏற்படா வண்ணம் சரீர அமைப்பை இசைவிப்பது. அந்தந்த காய்ச்சலின் சுபாவத்தைக்கொண்டே இவ்விரண்டு வழிகளில் எதை உபயோகிக்கவேண்டுமென்று வைத்தியன் நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும். வியாதியுள்ளவர்களைத் தனியாக ஒதுக்கிவைத்தும், அவர்களுடுத்திய உடை, வசித்தவீடு இவைகளை அறவே சுத்தம்செய்தும் புழுக்களை அழிக்கலாம். தனியே ஒதுக்கிவைப்பதால் சில வியாதிகள் நிர்மூலமாகின்றன. இவ்வழியை யனுஷ்டித்தே ஒரு காலத்தில் இங்கிலாந்தில் நாய்வெறி விலகிற்று. ஆனால் சில சந்தர்ப்பங்களில் தனியே ஒதிக்கிவைத்தல் பலனளியாமற்போகின்றது. உதாரணமாக கக்குவாய் இருமல் 15-நாள் கழித்து அவ்வியாதி கண்டுபிடிக்கப்பட்டு அந்தவியாதியுள்ள குழந்தையை ஒதுக்கிவைத்துவிட்டதாக வைத்துக்கொள்ளுவோம், அப்படி ஒதுக்கிவைத்ததால் முன் கூடவிருந்த மற்ற குழந்தைகளுக்கு அது அணுகாதென்று நம்பமுடியாது. அப்பேர்பட்ட சந்தர்ப்பங்களில் கூடவிருந்தவர்களுக்கு அவ்வியாதியால் பாதகம் ஏற்படாவண்ணம் சரீர அமைப்பை இசைவிப்பதே சாத்தியமான காரியம். இதற்கு இரண்டு வழிகள் உண்டு. சர்வவிதத்தாலும் சரீர ஆரோக்யத்தை அதிகப்படுத்துவதும், நிதானமாக சில மருந்துகளால் காய்ச்சலை யுண்டுபண்ணுவதும். ஆக இவ்விரண்டில் பிந்தியவழி ஆங்கில வைத்தியர்களால் மிகவும் கையாளப்படுகின்றது. மிகவும் பலம் பொருந்திய வாலிபனும் மேற்சொல்லிய புழுக்களின் வியாபகத்தால் அதிக தொந்திரவுக்குள்ளாகின்றான்.

3/10/44.
சென்னை-600 005.